CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# தி கோவை ஹெரால்டு
THE KOVAI HERALD

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 34 | English & Tamil Weekly | 25-1-2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-

# யானைகள் இல்லாத சாடி வயல் முகாம்

தி கோவை ஹெரால்டு




கோவைவனக்கோட்டம் போளுவாம்பட்டி வனச்சரகம், சாடிவயலில் 8 கோடி ரூபாய் செலவில், யானைகள் முகாம் அமைக்கப்படும் என, தமிழக அரசு அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக, யானைகள் முகாம் பணிக்கு, டெண்டர் விடப்பட்டு கடந்தாண்டு ஏப்ரல்மாதம், சாடிவயலில், 50 ஏக்கர் பரப்பளவில், முகாம்பணிகள் துவங்கின.

பழைய யானைகள் முகாமில்இருந்தவசதிகளை புனரமைத்தும், கூடுதலாக, 18 புதிய யானைகள் ஷெட், 2 கரோல், இரண்டு கி.மீ., தொலைவிற்கு சோலார் மின்வேலி, 40 சோலார் விளக்குகள், 3 சிறிய குட்டைகள், பாகன்கள் தங்கும் விடுதிகள், 20 இடங்களில் தண்ணீர் வசதி, யானைகள் குளிப்பதற்கான ஷவர், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, போர்வெல், சி.சி.டி.வி., கேமராக்கள், யானைகள் முகாமை சுற்றி அகழி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 30ம் தேதி இந்த முகாமை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்த வனச்சரகத்தில், தினசரி காட்டு யானைகள் ஊருக்குள் புகுவதும், விளைநிலங்களுக்குள் புகுவதும், மனித விலங்கு மோதல் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுவதும் தொடர் கதையாகி வருகிறது. மக்களை காக்க வரும் வனத்துறையினரும், காட்டு யானைகளால் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, புதிதாக கட்டப்பட்ட யானைகள் முகாமை திறந்து, கும்கி யானைகள் கொண்டு வர வேண்டியது அவசியமாகிறது ஆனால், திறக்கப்பட்டு ஒரு மாத காலமாகியும் இன்னும் வரை இந்தமுகாமுக்கு யானைகள் கொண்டு வரப்படவில்லை. இது குறித்து, ஆனைமலை புலிகள் காப்பக இயக்குனர் கூறுகையில், இங்கு யானைகளை கொண்டு வர தமிழக முதன்மை வனபாதுகாவலரித்தில் அனுமதி கேட்டுள்ளோம். அனுமதி கிடைத்ததும் யானைகள் கொண்டு வரப்படும் என்றார்.

கோவை சுற்று வட்டாரத்தில் ஏராளமாக யானைகள், விவசாய நிலங்களில் புகுந்து பயிற்களை சேதப்படுத்துகின்றன. காட்டு யானைகளை விரட்ட கும்கி யானைகள் டாப்ஸ்லிப், முதுமலை பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்டன. இங்கேயே, யானைகள் இருக்கும் பட்சத்தில் காட்டு யானைகளை விரைவாக வனத்துக்குள் விரட்ட முடியும். இதை, கருத்தில் கொண்டே சாடி வயல் பகுதியில் புதிய யானைகள் முகாம் அமைக்கப்பட்டது. எனவே, விரைவில் இங்கே கும்கி யானைகளை கொண்டுவர வேண்டுமென்று மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# டார்ச்சா... சூரியனா...
# 12 தொகுதி கேட்கும் கமல்

தி கோவை ஹெரால்டு



தமிழகத்தில் அடுத்த சில மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் அனைத்தும் தீவிர தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த தேர்தலில் தி.மு.க.-காங்கிரஸ் இந்தியா கூட்டணி, அ.தி.மு.க. பா.ஜ.க என்.டி.ஏ கூட்டணியில் இவற்றுடன் சேர்த்து, நாம் தமிழர் கட்சி தமிழக வெற்றிக்கழகம் கட்சியும் முதல்வர் வேட்பாளராக களமிறங்கியுள்ளதால் 4 முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க கூட்டணியில் இருந்து விலகிய அ.தி.மு.க மீண்டும் என்.டி.ஏ கூட்டணியில் இணைந்துள்ளது. அதேபோல் எதிரிகள் என்று அரசியல் வட்டாரத்தில் சொல்லப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி அமமுக டிடிவி தினகரன் ஆகிய இருவரும் இந்தகூட்டணியில் இணைந்துள்ளனர். இதனால் என்.டி.ஏ கூட்டணி கூடுதல் பலத்துடன் தேர்தலை சந்திக்கும்.

என்.டி.ஏ கூட்டணி சார்பாக மதுராந்தகத்தில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரும் பங்கேற்ற இந்த பொதுக்கூட்டம் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது, அதே சமயம், இந்தியா கூட்டணியில் என்ன நடக்கிறது என்பது குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. அதேபோல் தே.மு.தி.க கட்சி எந்த கூட்டணியில் இணையும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மக்கள்நீதிமய்யத்திற்கு வாக்கு வங்கி அதிகம் உள்ள 12 தொகுதிகளின் பட்டியலை தி.மு.க-விடம் கமல் வழங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் மக்கள் நீதி மய்யத்தின் நிர்வாக் குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. டார்ச்லைட் சின்னத்திலேயே போட்டியிட மக்கள் நீதி மய்யம் விரும்புவதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் உதயசூரியன் சின்னத்தில் மக்கள் நீதி மய்யத்தை போட்டியிட வைக்க தி.மு.க விரும்புவதாக கூறப்படுகிறது.

# மகனை மத்திய அமைச்சராக்கி பார்க்க ஆசை
## தேமுதிக எனது பிள்ளை... பிரேமலதா சொல்வதன் ரகசியம்

தி கோவை ஹெரால்டு



தமிழக சட்டமன்றத்துக்கு தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தமிழக அரசியல் களம் நாளுக்கு நாள் சூடு பிடித்து வருகிறது. ஆளும் திமுகவும், எதிர்க்கட்சியான அதிமுகவும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான கூட்டணி அமைக்க தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியில் தேமுதிகவை இணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் இழுபறி இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம் தேமுதிக தரப்பில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள்தான் என்கிறார்கள்.

திமுகதலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக உள்ளிட்ட கட்சிகள் உள்ளன. ராமதாஸ் பாமக வர வாய்ப்புள்ளதாக கூறுகிறார்கள். தற்போது, தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை மட்டுமே திமுக கூட்டணியில் எஞ்சியுள்ளது. சில கூட்டணி கட்சிகளிடமிருந்து ஆட்சியில் பங்கு என்ற கோரிக்கை வைத்தாலுத், இறுதி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் திமுகதலைவர்ஸ்டாலினிடத்தில்தான் உள்ளது. அதனால், திமுக கூட்டணியில் பெரிய குழப்பம் எதுவுமே இல்லை.

மற்றொரு பக்கத்தில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாஜக, அன்புமணிபாமக, வாசனின் தமாகா மற்றும் சில குட்டிக் கட்சிகள்இடம்பெற்றுள்ளன. அதிமுக கூட்டணியில் இருந்த தேமுதிக மட்டும் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்காமல் உள்ளது. விஜயகாந்த் மறைவுக்குப் பிறகும் தேமுதிகவுக்கு கணிசமான வாக்கு வாங்கி இருப்பதாக பாஜக மேலிடம் கருதுகிறது. இதனால், தேசிய ஜனநாயக கூட்டணியில் தேமுதிக இணைவது அவசியம் என பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜக மேலிட தலைவர்கள் விரும்புகின்றனர். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த ஜனவரி 9ம் தேதி தேமுதிக கூட்டணி குறித்து அறிவிப்பதாக கூறப்பட்டது. ஆனால், இன்று வரை எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி, தேமுதிக தரப்பினருடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்திவருவதாகக்கூறப்படுகிறது. ஆனால், பிரேமலதா சட்டமன்ற தேர்தலில் இரட்டைஇலக்கதொகுதிகள் ஒதுக்க வேண்டும் மற்றும் ராஜ்யசபா எம்பி பதவி வழங்க வேண்டும், மகனுக்கு மத்திய இணை அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என கேட்டதாக சொல்லப்படுகிறது. எடப்பாடி பழனிச்சாமியோ, 10தொகுதிகள்வரை வழங்க முடியும். தேர்தலுக்குப் பிறகு ராஜசபா சீட் குறித்து பரிசீலனை செய்யலாம் என்று பதிலளித்ததாக தெரிகிறது.

பிரேமலதா வைத்த டிமாண்ட்களை அதிமுக தலைமை, பாஜக மேலிடத்திற்கு எடுத்துச் சென்றது. இதனையடுத்து, டெல்லியில் இருந்தபடியே தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஸ் கோயல்தொலைபேசிமூலம் தேமுதிகபொதுசெயலாளர் பிரேமலதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அப்போது, தேசியஜனநாயக கூட்டணியில் இணைந்து சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளுங்கள். விரைவில் சென்னை வந்துநேரில் சந்திப்பதாக தெரிவித்திருக்கிறார். ஆனால், அந்த பேச்சுவார்த்தையில் தேமுதிக தரப்பு உடன்படவில்லை.

இந்த தேர்தலில் 30 சீட், தேர்தல் செலவுக்கு பல கோடி பணம், தனது மகன் விஜயபிரபாகரனுக்கு மத்திய இணை அமைச்சர் பதவி போன்றவற்றை பிரமேலதா கேட்டு டிமாண்ட் செய்வதாக தெரிகிறது. பிரேமலதாவின் இந்த டிமாண்ட் பாஜக தரப்பை வாயடைக்க வைத்து விட்டதாம். கடந்த மக்களவை தேர்தலில் விருதுநகர் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பாக போட்டியிட்ட விஜய பிரபாகரன் 4,379 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் கட்சியின் மாணிக் தாக்கூரிடத்தில் தோல்வியடைந்தார். தோல்விக்கு பிறகு பேசிய பிரேமலதா, “விருதுநகரில் விஜய பிரபாகரன் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டுள்ளார். வீழ்ச்சியடையவில்லை, வீழ்த்தப்பட்டிருக்கிறார். சூழ்ச்சியால் எனது மகன் வீழ்த்தப்பட்டுள்ளார். இதுதான் உண்மை என்று பொறுமினார். தனது மகன் அப்போது தோல்வியடைந்தாலும், ஒருதாயாக அவரை மத்திய அமைச்சராக்கி பார்க்க பிரேமலதா கங்கணம் கட்டி கொண்டிருப்பதாக விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.


தேமுதிக எனது பிள்ளை, என்ன செய்ய வேண்டுமென்று ஒரு தாயாக எனக்கு தெரியும் என்று பிரேமலதா கூறுவதற்கு அர்த்தம் இப்போது புரிகிறதா?.

## சுபாஷ் சந்திர போஸ் பொன்மொழிகள்




- உண்மையும் நேர்மையும் உள்ளவனாக இருந்தால் அஞ்சா நெஞ்சம் கொண்டவனாக வாழலாம்.
- சாதிக்க இயலாததை கூட சாதிக்க இயலும். தன்னம்பிக்கை என்னும் மனோ சக்தியால்.
- முதலில் தன்னை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
- கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

LAKSHAKA TEX LLP



# National Model Senior Secondary School Celebrates Grand Alumni Meet 2026



THE KOVAI HERALD

Dr. P. Mohan Chandar, Chairman of the National Model Group of Schools, set a visionary tone for the future of the institution's graduates as National Model Senior Secondary School hosted a grand and heart-warming Alumni Meet. The successful execution of the meet was spearheaded by the National Model Alumni Association.

Lavanya, the Vice Principal welcomed the gathering. Principal, Dr. Geetha Laxman presided over the function. The gathering also heard from alumni representatives across various eras, including Anirudh Jeganathan (2015), Nithin Sounder SJ (2019), Sona Sree VM (2020), and Angelin B (2024). “Our vision is to build a strong, connected, and supportive National Model Alumni Network for the years to come,” remarked Dr. P. Mohan Chandar during his closing address.

## Sri Ramakrishna Hospital Marks Golden Jubilee

# Vice President C.P.Radhakrishnan Lauds Role in Healthcare Outreach



Dr. Sundar Ramakrishnan, Managing Trustee of SNR Sons Charitable Trust presenting a memento to Vice President of India, C.P. Radhakrishnan in the presence of Joint Managing Trustee S. Narendran, Trustees V. Ramakrishna and D. Lakshminarayanaswamy.

THE KOVAI HERALD

Sri Ramakrishna Hospital celebrated its 50th Golden Jubilee alongside the Silver Jubilee of Sri Ramakrishna Dental College and Hospital at the CODISSIA Trade Fair Complex. The event was graced by the Vice President of India, C.P. Radhakrishnan, who attended as the Chief Guest.

Addressing the gathering, the Vice President commended the significant role played by private healthcare institutions in strengthening government health initiatives. “Health care schemes designed by both the State and Central Governments focus on ensuring the well-being of the public. For these schemes to succeed, perfect coordination among all stakeholders is required. Institutions like Sri Rama krishna Hospital have played an extraordinary role in ensuring that these schemes reach the public,” he said.

The Vice President also highlighted the hospital's pioneering contribution to medical tourism in the western region of Tamil Nadu. “The 50-year journey of Sri Ramakrishna Hospital is a glorious one. Medical institutions have two key responsibilities—caring for patients and producing qualified professionals. The institutions under SNR Sons Charitable Trust have achieved phenomenal success in both,” he added.

The event commenced with a welcome address by Dr. Sundar Ramakrishnan, Managing Trustee of SNR Sons Charitable Trust. The Vice President was formally received by Priyanka Sundar upon his arrival.


As part of the ceremony, the Vice President unveiled the commemorative logos marking the milestone celebrations of the hospital and dental college. He also presented awards to doctors and staff members for excellence in healthcare service before delivering the Chief Guest address.

The celebration witnessed the participation of key office-bearers of SNR Sons Charitable Trust, including Joint Managing Trustee S. Narendran, Trustees V. Ramakrishna and D. Lakshminarayanaswamy, Chief Executive Officer C.V. Ramkumar, and Chief Administrative Officer D. Maheshkumar. Also present were Dr. S. Rajagopal, Medical Director, and Dr. S. Alagappan, Medical Superintendent of Sri Ramakrishna Hospital.

# LMW Chairman Sanjay Jayavarthanavelu unveil new logo of DJ Academy of Design

THE KOVAI HERALD

The new identity of Coimbatore's premier institute for design education - DJ Academy of Design (DJAD) was unveiled by Sanjay Jayavarthanavelu, Chairman and Managing Director, LMW and award-winning Indian Animation icon Suresh Eriyat during the inaugural edition of a key talk series ‘Let's Talk! In Kovai’ hosted by Mani Higher Secondary School.




Renowned animation filmmaker Suresh Eriyat took part as the chief guest of the logo-reveal event and the inaugural of the talk series.

Lalitha Devi Sanjay Jayavarthanavelu, Trustee, GKD Charity Trust; Vydianathan Ramaswami, Dean, DJAD; Michael, Member of Governing Council, DJAD, Sarita Sundar, Academic Advisor, DJAD, Rahul Kamath, Chair and Neil Kikani, Past Chair from Young Indians (Yi) and many other special invitees, distinguished individuals from academia and industry, students took part in the event.

The event was presented by DJ Academy of Design, supported by the LMW Group, and organised in partnership with Young Indians (Yi), Coimbatore Chapter, under the Confederation of Indian Industry (CII). Lalitha Devi Sanjay Jayavarthanavelu welcomed the gathering.

Sanjay Jayavarthanavelu in his address said that this gathering of the academy industry at the inaugural of ‘Lets Talk! In Kovai’ series is an incredible one, and this platform will be used to transfer knowledge, share ideas and also create innovation in communities. Talking about design education and innovation, he said the purpose of DJ academy of Design is to impart design knowledge amongst our student community and play a role that will accelerate the make in India movement.

# Coimbatore's Kikani Vidhya Mandir becomes one of the Finalist for Zayed Sustainability Prize

THE KOVAI HERALD

The Zayed Sustainability Prize, the UAE's pioneering award for innovative global solutions, has officially announced its 2026 cohort of winners and finalists1. Amidst a record-breaking 7,761 submissions from 173 countries, India's presence remains remarkably strong. Kikani Vidhya Mandir, a forward-thinking private institution from Coimbatore, Tamil Nadu, has emerged as a finalist for the Global High School Award for the South Asia Region.

In a ceremony held during Abu Dhabi Sustainability Week (ADSW) and attended by Heads of State, Ministers, and business leaders, His Highness Sheikh Mohamed bin Zayed, President of the UAE, awarded the winners for their outstanding contributions to advancing sustainable development worldwide. H.E. Dr. Sultan Ahmed Al Jaber, UAE Minister of Industry and Advanced Technology and Director General of the Zayed Sustainability Prize, praised the winners for advancing scalable innovations that deliver tangible social and environmental benefits. Geetha Raj, Principal, Kikani Vidhya Mandir was also present on the occasion.

# Swara Tharangini Interschool Bhajan Competition in Coimbatore

Swara Tharangini, an interschool bhajan singing initiative inspired by the vision of The Art of Living Foundation, was inaugurated in Coimbatore.



The initiative draws inspiration from the teachings of Poojya Gurudev Sri Sri Ravi Shankar. Sitara Vikram, Art of Living Tamil Nadu Apex Body member and Founder of CS Academy, delivered the welcome address. A key highlight of the inauguration was the launch of the Swara Tharangini Bhajan Journal, a thoughtfully curated year-long companion for student participants. The inauguration also featured the launch of the Swara Tharangini website, created as a dedicated digital platform to support bhajan learning, participation, and community engagement, further strengthening the initiative's outreach and continuity.

## Amrit Bharat Express to Operate Between

# Nagercoil and New Jalpaiguri via Coimbatore from January 25

The newly launched Amrit Bharat Express service between Nagercoil and New Jalpaiguri, passing through Coimbatore, will commence operations on January 25, according to the Salem Railway Division.

Prime Minister Narendra Modi flagged off Amrit Bharat trains connecting Tamil Nadu with West Bengal on January 17, including services from Nagercoil, Tiruchi and Tambaram. Following the launch, regular operations are now being initiated.

According to an official release, Train No. 20604 NagercoilNew Jalpaiguri Amrit Bharat Express will depart Nagercoil at 11 p.m. on Sundays starting January 25 and arrive at New Jalpaiguri at 5 a.m. on Wednesdays.

In the return direction, Train No. 20603 New JalpaiguriNagercoil Amrit Bharat Express will depart New Jalpaiguri at 4:45 p.m. on Wednesdays beginning January 28 and reach Nagercoil at 11 p.m. on Fridays. The train will halt at Kishanganj, Barsoi, Malda Town, Rampurhat, Cuttack, Bhubaneswar, Berhampur, Palasa, Rajahmundry, Vijayawada, Ongole, Gudur, Renigunta, Katpadi, Jolarpettai, Salem, Erode, Tiruppur, Coimbatore, Pollachi, Udumalpet, Palani, Dindigul, Madurai, Virudhunagar, Kovilpatti, and Tirunelveli en route.

# ‘Ekaa The One’ Exhibition Showcased Forgotten Yogini Traditions in Coimbatore



The Kasturi Sreenivasan Art Gallery hosted Ekaa The One, a thematic convergence of art, scholarship and spiritual exploration. on January 21 and 22. The exhibition, presented by artist, artpreneur and author Dr. Beena Unnikrishnan, showcased her decade-spanning body of work titled The 64 Yoginis Trail. The ambitious national project, which traversed 16 Indian states over 81 days and covered nearly 10,000 km by road, featured 64 original paintings portraying the once-revered Yogini deities of ancient India.

The event also featured Y64: Whispers of the Unseen, a documentary directed by filmmaker and NEO Film School founder Dr. Jain Joseph and produced by Dr. Beena. The film offered audiences rare glimpses of remote Yogini temples, many of which are now inaccessible or fading into obscurity. Curatorial Advisor Shahzada Khurram lent scholarly depth to the exhibition, ensuring the artistic narrative resonated with cultural and historical nuance.

# Motorola Announces Unbeatable Republic Day Deals

Motorola, a global leader in mobile phone innovation and India's leading~ AI smartphone brand, announced exciting Republic Day offers on its bestselling smart phones, giving consumers a unique opportunity to upgrade to feature-packed 5G devices at unbeatable prices. The offers will be available during the Flipkart Republic Day Sale. As part of the Republic Day Sale, Motorola is reinforcing its commitment to offering the most feature-rich smartphones from its portfolio at attractive prices, delivering unmatched value to consumers. Starting with the flagship edge series, the motorola edge 60 PRO can be purchased at an effective price of just Rs. 25,999, reduced from Rs. 29,999 making it the best flagship grade phone in its price. T.M. Narasimhan, Managing Director, Motorola India introduced the new deals.

# Being Joyful Beyond Circumstances

## Sadhguru, Isha Foundation

THE KOVAI HERALD

**Sanjeev Kapoor:** Namaskar Sadhguru. My question is that when we cook, if we are to experience the joy of cooking, which is something internal, I have to cook for my joy. But when you are cooking for others, then you want to give them joy, and at times, there is a conflict. Who should win?



Sadhguru: The most fundamental thing about the spiritual process is just this: you live here like only you exist, no one else but you. Because you see everyone as yourself and there is no issue. People ask me, “Sadhguru, wherever you go, whether it is 10,000 people or 100,000 people, how do you speak?” Well, I am talking to them like I would talk to myself, if I had such a habit.

There is no “you.” What I am doing is not some kind of oratory or discourse I am just talking like I would talk to myself, because I do not see anyone but myself. Spiritual process means that in some way, in your experience, you became all-inclusive. Comparison and competition has disappeared from your life. Otherwise, what starts as comparison over time transforms into competition, and then it turns ugly. Where there is comparison and competition, even something as alive and beautiful as joy turns ugly. Joy is the most important aspect of your life. Joy means your experience of your existence is fantastic.

When you are all-inclusive, your experience of your existence becomes beautiful, and that is why you are joyful. Now, I am joyful not because I make the best dosas, or better dosas than you, nor will I be more joyful because I eat the best things that you cook. Even before I come into your restaurant, I will be very joyful. If you make something good, I will eat joyfully. If you make something bad, very joyfully, I will push it aside. With your good cooking or bad cooking you cannot give me my joy, nor can you steal my joy. I want you and everyone in the world to become like this too, that no one else can determine what happens within you.

# Honda Marks 9 Years of Road Safety Education at Traffic Training Park in Coimbatore

Honda Motorcycle and Scooter India (HMSI) marked the 9th anniversary of its Traffic Training Park in Coimbatore, Tamil Nadu, a dedicated space for promoting road safety education through interactive learning. Since its inception, the parkhas trained over 3.7 lakh people across age groups, fostering safer and more responsible mobility in the region. The anniversary celebration was graced by M. Thirunavukkarasu, Assistant Commissioner of Police (Traffic), Coimbatore. Adding a spark of enthusiasm, students from CMS Vidya Mandir Matriculation Higher Secondary School and Sree Hayagriva Ideal School participated in sessions designed to make safety education engaging and memorable. The celebration featured a series of activities such as Safety Riding Theory Session, games and Kids mindset videos to instil basic road discipline through blended learning.


# Rural Youth Invited to Apply for Electronic Crop Survey Work in Coimbatore District

Eligible rural youth in Coimbatore district can apply for electronic crop survey work, according to a press release issued by M. Tamilselvi, Joint Director of Agriculture, Coimbatore.

For the 202526 Rabi season, electronic crop survey work is being carried out across all blocks, covering 8,85,540 land sub-divisions, through field staff of the Agriculture and Farmers' Welfare Department and volunteers. To complete the work on time, the process of selecting rural volunteers is underway.

An incentive of Rs.3,000 per sub-division will be provided. Rural men and women, volunteers and unemployed graduates familiar with using Android mobile phones can approach their respective Assistant Director of Agriculture or Assistant Director of Horticulture offices for enrolment. Farmers have also been requested to extend full cooperation to the field staff engaged in the electronic crop survey work, the release added.

## தைப்பூசத்தையொட்டி மருதமலைக்கு வாகனம் செல்ல தடை



கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு வரும் ஜனவரி 30 மற்றும் பிப்ரவரி3 ஆகியதேதிகளில் மலைப்பாதையில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

தைப்பூச விழாவை முன்னிட்டுஜனவரி26அன்று கொடியேற்றம், ஜனவரி 31 அன்றுசுப்பிரமணியசுவாமி திருக்கல்யாணம், பிப்ரவரி1 அன்று பிற்பகல் 3 மணிக்கு தேரோட்டம்மற்றும்பிப்ரவரி 2 அன்று தெப்பத் திருவிழா நடைபெறுகின்றன. பிப்ரவரி 3 அன்று கொடியிறக்குதல், பிப்ரவரி 4 அன்று வசந்த உற்சவம் நடைபெறும்.

வாகனத் தடைக்கால நாட்களில் பக்தர்கள் மலைப்படிகள் வழியாகவும், கோயில் பேருந்துகள் மூலமாகவும் சுவாமி தரிசனம் செய்யலாம். பிப்ரவரி 5 முதல் வழக்கம்போல இரவு 7 மணி வரை தரிசனம் அனுமதிக்கப்படும் என்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# விஜய்யை கூட்டணிக்குள் கொண்டு வர அமித்ஷா போடும் கணக்கு

*தி கோவை ஹெரால்டு*



அதிமுக-பாஜக கூட்டணியில அன்புமணியின் பாமக, தினகரனின் அமமுக சேர்ந்திருக்கு. ஏற்கனவே வாசன் தமாகா அங்கதான் இருக்கு. தேமுதிக வருது.. பியூஷ் கோயல் பேசப் போறாருன்னும் சொன்னாங்க. இருந்தாலும் பிரேமலதாவிடம் பியூஸ் கோயல் பேசவில்லை. தேமுதிக 10 அசெம்பிளி சீட், 1 ராஜ்யசபா சீட், மத்திய இணை அமைச்சர் பதவி கேட்குதாம். இதனால், பேச்சுவார்த்தையும் அந்த அளவுக்குதான் நிக்குது. இங்க வந்துருக்கிற பியூஷ் கோயல் பிரேமலதாவிடம் கூட்டணி பற்றி பேசாதற்கு காரணம் அமித்ஷா சொன்ன ஒரு வார்த்தைதான் காரணமாம்.

பியூஸ் கோயலிடம் பிரேமலதா கிட்ட பேசி சீட் நம்பர்ஸை எதுவும் கமிட் பண்ணிக்க வேணாம்னு சொல்லி இருக்கிறாரு அமித்ஷா. அமித்ஷாஜி தரப்பில் இருந்து சைடுல விஜய்கிட்ட தொடர்ச்சியாக பேசிகிட்டு இருக்காங்க. அதனால விஜய் தரப்புல முடிவு சொல்றவரைக்கும் தேமுதிகவை வெயிட் பண்ண வைக்குற முடிவுல பாஜக தரப்பு உள்ளதாம்.

அமித்ஷா தரப்பில் விஜய்யிடத்தில், '' நீங்கள் கூட்டணிக்கு உள்ளே வாங்க.. இப்பவரைக்கும் எங்க கூட்டணில சிஎம் கேண்டிடேட்டுன்னு நாங்க யாரையும் அறிவிக்கல.. நீங்களும் கூட்டணிக்கு உள்ள வந்து . எல்லோரும் சேர்ந்து தேர்தலை சந்திப்போம். எலக்‌ஷன் முடிஞ்சதுக்கு அப்புறமா சிஎம், டெபுட்டி சிஎம்னு மற்ற விஷயங்களை பேசி முடிவெடுப்போம்னு கூறப்பட்டுள்ளதாம்.

மேலும், நீங்க கேட்கிற சீட்டையும் தர்றோம். தேர்தல் செலவுன்னு மத்த விஷயங்களையும் நாங்களே பார்த்துக்கிறோம். நீங்க சொல்றவங்களுக்கு மற்ற மாநிலங்களில் இருந்து கூட ராஜ்யசபா எம்பி பதவியும் தர்றோம்னு பாஜக தரப்பில் பேசியிருக்காங்க. இதுக்கு விஜய்கிட்ட இருந்து இறுதி முடிவு வர வெயிட் பண்ணிட்டு இருக்காங்க. அதனாலதான் பிரேமலதாகிட்ட தேர்தல் சீட் பற்றி இன்னும் பேசவில்லை பாஜக தரப்பு.

அமித்ஷா தந்த ஆஃபர்களை விஜய்யும் சீரியசா டிஸ்கஷன் நடத்திட்டு இருக்காரு. ஆனா எந்த முடிவும் நாம இப்போதைக்கு எடுக்க வேண்டாம். ஏன்னா நம்மகிட்ட ராகுல் காந்தியும் பேசிகிட்டு இருக்காரு. ராகுல் காந்தி இறுதியாக சொல்றதை வெச்சு நாம பாஜக- அதிமுக கூட்டணிக்கு போறதா? தனித்தே போட்டியிடறாதா?ன்னு முடிவு செய்வோம்.. அதுவரைக்கும் கூட்டணியை பத்தி யாரும் எங்கேயும் பேசாதீங்கனு விஜய் கட்சிக்காரங்களுக்கு கட்டளை போட்டுள்ளாராம்.

விஜய்யை குளிர வைத்ததான் டெல்லியில இருந்து இப்போ குட் நியூஸ் வந்துருக்குது. விஜய்க்கு ரொம்பவே பிடிச்ச, அவரு கேட்ட விசில் சின்னத்தை எலக்‌ஷன் கமிஷன் ஒதுக்கி கொடுத்துருக்கு. விஜய்க்கு என்ன வேணும்னாலும் டெல்லி செஞ்சு தரும்னு சொல்ற சிக்னல்தான்யா இதுனும் அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

அதேவேளையில், திமுக-காங்கிரஸ் கூட்டணி பற்றிய தகவலும் வெளியாகியுள்ளது. சோனியாகாந்திக்கு திமுக கூட்டணில இருக்கதான் ஆசையாம். அதனால காங்கிரஸ் நம்மை விட்டு போகாது.. இப்படி பேசுறது எல்லாமே சீட்டை அதிகமா வாங்கத்தான்.. நாமும் பேச்சுவார்த்தை குழு அமைச்சு பேசுனாவே எல்லாமே சரியாகிடும்னு திமுக தரப்பு நம்புகிறது.

சில நாட்களுக்கு முன் , டெல்லிக்கு போன சபரீசன் ராகுல்- மல்லிகார்ஜுன கார்கேவை சந்திச்சு பேசுனாரு. அதிகபட்சம் 30 சீட் வரைக்கும் கூட நாங்க ரெடிதான்.. ஆனா அமைச்சரவையில மட்டும் பங்கு இல்லை"ன்னு உறுதியாக சொல்லப்பட்டதாம். காங்கிரஸ் கட்சிக்கு துணை சபாநாயகர் பதவி தர்றோம். கூடுதலாக வாரியங்களும் கொடுக்கிறோம். அரசு நியமன பதவிகளில் குறிப்பிட்ட பெர்சண்டேஜ் தருவோம். உள்ளாட்சி தேர்தலிலும் அதிகமான இடங்களை ஒதுக்குறோம்னு சொன்னதாக தகவல்.

சொல்ல வேண்டியது எல்லாமே சொல்லியாகி விட்டது. இனிமேல், காங்கிரஸ்தான் முடிவெடுக்கனும் என்று திமுக தரப்பில் சொல்லப்படுகிறது.

ஆனால், பனையூர்காரரால் தான் காங்கிரஸ் முடிவெடுக்க தாமதிக்கிறதாம். காங்கிரஸ் காரர்களிடத்தில் விசாரித்தால், ராகுலும் விஜய்யும் பேசிகிட்டுதான் இருக்காங்க. எங்களுக்கு 100 சீட் தர்றோம். துணை முதல்வர் பதவி கொடுக்கிறோம்னு விஜய் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. திமுகவுடன் கூட்டணியில நீடிச்சா, திமுகவோட வெற்றிதான் உறுதியாகும்.. ஆனாலும் எங்களுக்கு ஆட்சியில பங்கு கிடைக்காது. அதேநேரத்துல விஜய் கொடுத்த ஆஃபரை ஏத்துகிட்டு கூட்டணிக்கு போனா, 100 தொகுதிகளில்ல காங்கிரஸ் போட்டியிடும். கட்சிக்கு கூடுதல் எம்.எல்.ஏக்கள் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. ஆட்சியிலும் பங்கு பெறுவோம் என்று ராகுல் கணக்கு போடுவதாக கூறுகின்றனர்.

மேலும், விஜய் மீது ராகுல் காந்திக்கு ஒரு பரிதாபமும் ஏற்பட்டுள்ளதாம். கரூர் சம்பவத்துல திமுக அரசும் , ஜனநாயகன் பட விவகாரத்துல மத்திய பாஜக அரசும் விஜய்யை பழிவாங்குறாங்கன்னு அனுதாபமும் ராகுல் நினைக்கிறாராம். இதனால, விஜய்யோட செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகமாகுதுன்னுதான் சர்வே ரிப்போர்ட்ஸ் போயிருக்கு. இதுவும் காங்கிரசுக்கு நல்லதுதானே அப்படினு ராகுல் நினைக்கிறாராம். இதனால், கூட்டணி எப்படி வேண்டுமானாலும் மாறலாம் என்றுதான் அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

பல தரப்பு ஆப்ஷன்களையும் ராகுல் காந்தி கணக்கு போட்டு வெச்சிருக்கிறதால ராகுல் திமுகவை மண்டை காய வெச்சிகிட்டு இருக்கிறாரு என்கின்றனர் விஷயம் அறிந்தவர்கள்.

# சிறையில் உருவான காதல்... கல்யாணம் முடித்த ஆயுள் கைதிகள்



ராஜஸ்தான் மாநிலம் ஆழ்வார் என்ற பகுதியைச் சேர்ந்தவர் பிரியா ஷேத். மாடல் அழகியான இவருக்கு திக்ஷாந்த் கம்ரான் என்ற காதலர் இருந்துள்ளார். திக்ஷாந்துக்கு ஏராளமான கடன் இருந்துள்ளது. கடனை அடைக்க முடியாமல் திணறியுள்ளார். இது குறித்து, காதலி பிரியாவிடம் கூறி புலம்பியுள்ளார். கடன் பிரச்னைக்கு தீர்வு காண பிரியா ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி, தின்டர் ஆப்பில் சிங் என்பவருடன் பழகுவது போல நடித்துள்ளார். கடந்த 2018ம் ஆண்டு மே மாதத்தில் பாலாஜி நகரிலுள்ள வீட்டுக்கு சிங்கை, பிரியா அழைத்துள்ளார். வீட்டுக்குள் சிங் வந்ததும், காதலர் கம்ரா மற்றும் அவரின் நண்பர் வாலியா ஆகியோர் உடனடியாக 10 லட்சம் கேட்டு மிரட்டியுள்ளனர். பயந்து போன, சிங் தந்தையிடம் இருந்து 3 லட்சம் வாங்கி கொடுத்துள்ளார். பின்னர், அவரை விடுவித்தால் போலீசில் சிக்க வைத்து விடுவார் என்று பயந்து போனவர்கள், சிங் கொலை செய்துள்ளனர். முகத்தை அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைத்து சடலத்தை அமெர் மலை பகுதியில் வீசி விட்டு தப்பி விட்டனர். மே மாதம் 3ம் தேதி சிங்கின் சடலம் மீட்கப்பட்டது. இந்த வழக்கில் 3 பேரும் கைது செய்யப்பட்டனர். இது பிரியா ஷேத் ஜெயிலுக்கு போன கதை.

இதே ஆழ்வார் பகுதியைச் சேர்ந்தவர் ஹனுமன் பிரசாத். இவருக்கு தன்னை விட 10 வயது முதிர்ந்த சன்டோஷ் என்ற பெண்ணுடன் பழக்கம் இருந்துள்ளது. இந்த பெண்ணுக்கு கணவர் மற்றும் 3 குழந்தைகள் உள்ளனர். இவர்கள், அனைவரும் ஆழ்வார் பகுதியில் ஒரே வீட்டில் வசித்துள்ளனர். கடந்த 2017ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி பிரசாத்தை வீட்டுக்கு அழைத்த சன்டோஷ் , உறங்கிக் கொண்டிருந்த கணவரை கொல்ல கூறியுள்ளார். பிரசாத் கொஞ்சமும் யோசிக்காமல் கத்தியால் சன்டோஷின் கணவர் பன்வரி லாலின் கழுத்தை அறுத்து கொன்றுள்ளார். இதனை, அந்த பெண்ணின் 3 குழந்தைகளும் கணவரின் அண்ணன் மகனும் நேரில் பார்த்துவிட்டனர். உடனே, குழந்தைகள் மற்றும் அண்ணன் மகனையும் கொல்லும்படி சன்டோஷ் கூற, கொஞ்சமும் இரக்கமே இல்லாமல் 3 குழந்தைகள் மற்றும் அந்த சிறுவனையும் பிரசாத் கொலை செய்துள்ளார். ஒரே இரவில் 5 கொல்லப்பட்டனர். ஆழ்வார் பகுதியில் நடந்த மிக மோசமான கொலை சம்பவமாக இது பார்க்கப்படுகிறது. இது ஹனுமான் பிரசாத் ஜெயிலுக்கு சென்ற கதை.

விசாரணை முடிவில், இவர்கள் இருவருக்குமே ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டிருந்தது. இருவரும் சங்கனீர் திறந்த வெளி சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு சிறையில் இருவரும் சந்தித்துள்ளனர். அப்போது, இருவருக்கும் காதல் மலர்ந்துள்ளது. இதையடுத்து, இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து சிறை அதிகாரிகளிடம் தெரிவித்தனர். தொடர்ந்து, ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தில் 15 நாள்கள் பரோல் கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. உயர்நீதிமன்றமும் பரோல் வழங்கியது. இதையடுத்து, ஜனவரி 23ம் தேதி (வெள்ளிக்கிழமை) அல்வார் நகரில் இவர்களின் திருமணம் நடைபெற்றது.

பிரியா ஷேத்துக்கு பரோல் வழங்க அவரால் கொலை செய்யப்பட்ட துஷ்யந்த் சர்மா குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் போவதாகவும் கூறியுள்ளனர். அதே வேளையில், சிறை அதிகாரிகள் ,'ராஜஸ்தான் திறந்தவெளி சிறை விதிகள், 1972-ன் கீழ் மட்டுமே பரோல் வழங்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள கைதிகளுக்குப் பொருந்தக்கூடிய மறுவாழ்வுக் கொள்கைகளுக்கு ஏற்பவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

### பொங்கல் விடுமுறைக்கு

# கோவை விமான நிலையத்திலிருந்து 58,000-க்கும் மேற்பட்டோர் பயணம்




பொங்கல் பண்டிகை முன்னிட்டு கோவை விமான நிலையத்தில் 6 நாட்களில் 58,000-க்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை விமான நிலையத்தில் உள்நாட்டின் சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூரு, கோவா உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கும் ஷார்ஜா, சிங்கப்பூர், அபுதாபி ஆகிய வெளிநாடுகளுக்கும் விமான சேவைகள் வழங்கப்படுகின்றன. பொங்கல் பண்டிகை முன்னிட்டு அதிக பயணிகள் விமான நிலையத்தை பயன்படுத்தி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோவை விமானநிலைய அதிகாரிகள் கூறும் போது, பொங்கல் பண்டிகை முன்னிட்டு கடந்த ஜனவரி 13-ம் தேதி முதல் ஜனவரி 18-ம் தேதி வரை 6 நாட்களில் மட்டும் மொத்தம் 175 விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன. 58,266 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். விமான பயணிகளுக்கு தேவையான வசதிகள் நிர்வாகம் சார்பில் செய்து தரப்பட்டது.

இதுதவிர சரக்கக அலுவலகம் சார்பில் 5 டன்னுக்கும் அதிகமான எடை கொண்ட கரும்பு ஷார்ஜாவிற்கு விமானங்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அதிமுக சட்டசபை தேர்தல் வாக்குறுதி குழுவிடம் தமிழக நெசவாளர் சங்கங்கள் கூட்டமைப்பு கோரிக்கை

விசைத்தறி நெசவாளர்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் யூனிட் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட் இலவசமாக வழங்க வேண்டும் என, கோவையில் அதிமுக சட்டசபை தேர்தல் வாக்குறுதி குழுவிடம் தமிழக நெசவாளர் சங்கங்கள் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுகுறித்து தமிழக நெசவாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் சுப்பிரமணியன் மற்றும் கந்தவேல் ஆகியோர் கூறும் போது:

தமிழக சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை அளிப்பதற்காக கோரிக்கைகளை கேட்டுள்ளனர். முதல் கட்டமாக ஜனவரி 13-ம் தேதி திருநெல்வேலி அதிமுக தேர்தல் குழுவிடம் கோரிக்கை மனு வழங்கினோம். அதைத் தொடர்ந்து ஜனவரி 18-ம் தேதி கோவையில் நடந்த நிகழ்வில் அதிமுக தேர்தல் வாக்குறுதிக் குழு முன்னிலையில் எங்கள் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை மனுவை சமர்ப்பித்தோம்.

அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் வெளியிட்ட அறிக்கையில், தீபாவளி பண்டிகை முன்னிட்டு பெண்களுக்கு புடவை வழங்கப்படும். திருமண தம்பதிகளுக்கு பட்டு வேட்டி சேலை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். அதை தமிழகத்தில் உள்ள நெசவாளர்களிடம் நேரடியாக உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்க வேண்டும் என, கேட்டுள்ளோம். மேலும் விசைத்தறி நெசவாளர்களுக்கு மாதம்தோறும் இலவச மின்சாரம் ஆயிரம் யூனிட், கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட் வழங்க வேண்டும் என கோரிக்கையை முன்வைத்துள்ளோம். நெசவுத்தொழில் அதிகம் உள்ள மாவட்டங்களில் நெசவாளர்கள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் தலைமையில் நடத்த வேண்டும். நெசவுத் தொழில் அதிகம் உள்ள மாவட்டங்களில் சாய கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அல்லது சுத்திகரிப்பு செய்யப்பட்ட சாயக்கழிவுநீரை குழாய் மூலம் கடலில் கலக்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அரசுத்துறை சார்ந்த அனைத்து சீருடைகளும் தமிழக கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களிடம் உற்பத்தி செய்ய வேண்டும். தமிழக மருத்துவமனை மற்றும் தொழில்நுட்ப துணி வகைகள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட 15 கோரிக்கைகளை நிறைவேற்றி தரக் கூறி எடப்பாடி பழனிச்சாமியிடம் மனு வழங்கியுள்ளோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



## சிறுதுளி அமைப்பு மூலம் 6 கோடி லிட்டர் மழைநீர் சேகரிப்பு; வனிதா மோகன் தகவல்



சிறுதுளி அமைப்பின் முயற்சியால் கோவை மாவட்டத்தில் மூன்று தடுப்பணைகள் புனரமைக்கப்படுவதால் 6 கோடி லிட்டர் மழைநீர் சேகரிக்கப்படவுள்ளது.

கோவையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் மற்றும் அறங்காவலர் ஜே. சதீஷ் ஆகியோர் கூறியதாவது, “கடந்த 22 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 10 லட்சம் மரக்கன்றுகள் நட்டுள்ளோம். அடுத்த 56 ஆண்டுகளில்மேலும் 15 லட்சம் மரக்கன்றுகள் நட செய்யதிட்டமிட்டுள்ளோம். மாநகராட்சியுடன் இணைந்து ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்து சமய அறநிலையத்துறையுடன் இணைந்து அன்னூரில் 5 ஏக்கரில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கப்பட்டுள்ளது.


தனியார் நிறுவனங்களின் ஆதரவுடன் கீழ்சித்திரைச்சாவடி, புதுக்காடு தடுப்பணைகள் மற்றும் சொரம்பு நீரோடை ஆகியவை புனரமைக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் பணி நிறைவடைந்து விடும். இதனால், மழைநீர் சேகரிப்புடன் நிலத்தடி நீர்மட்டம் உயரும். 6 கோடி லிட்டர் தண்ணீர் சேகரிக்கப்படும். இதன் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கோவைபிஎஸ்ஜிமருத்துவ அறிவியல்மற்றும்ஆராய்ச்சி நிறுவன அரங்கில் வரும் ஜனவரி 26 ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு ‘வைல்டு தமிழ்நாடு’ என்ற ஆவணப்படம் திரையிடப்பட உள்ளது. டிக்கெட் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் மரக்கன்றுகள் நட மற்றும் பராமரிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் .

சிறுதுளி அமைப்பின் சேவையை பாராட்டி செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் நடைபெற்ற மாமல்லன் நீர்த் தேக்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் விருது வழங்கி கவுரவித்துள்ளார்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

செய்தியாளர் சந்திப்பின்போது, நிர்வாக குழு உறுப்பினர்கள் சுஜினிபாலு, சந்திரசேகர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் சி.சின்னசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## டாக்டர் என்.ஜி.பி. கல்லூரிகளில் என்.ஜி.பி. எம்பவர்மெண்ட் விருது




தி கோவை ஹெரால்டு


டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து என்.ஜி.பி. எம்பவர்மெண்ட் விருது விழாவை நடத்தின.

இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் என்ஜிபி ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் நல்லா பழனிசாமி தலைமை வகித்தார். நிர்வாக அறங்காவலர் டாக்டர் தவமணி டி. பழனிசாமி, அறங்காவலர்கள் டாக்டர் அருண் என். பழனிசாமி மற்றும்மதுரா வி.பழனிசாமி ஆகியோர் பங்கேற்றனர். டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். சரவணன் வரவேற்புரையாற்றினார். டாக்டர் என்.ஜி.பி. தொழில்நுட்பக்கல்லூயின் முதல்வர் டாக்டர் எஸ்.யூ. பிரபாநடப்புகல்வியாண்டில் வழங்கப்பட்ட உதவித்தொகைகளின் புள்ளிவிவரங்களை உள்ளடக்கிய குறுந்தகவல் அறிக்கையைவழங்கினார்.

விழாவிற்கு தலைமை விருந்தினராக நாஸ்காம் இயக்குநர், சென்னை மாற்றம் அறக்கட்டளையின் இணை நிறுவனர் வி. உதய சங்கர் கலந்து கொண்டார். விழாவின் முக்கிய அம்சமாக கல்வி மற்றும் விளையாட்டு துறைகளில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்களுக்கு என்.ஜி.பி. எம்பவர்மெண்ட் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் ஓ.டி. புவனேஷ்வரன் (CEO), கல்விசார் இயக்குனர் முனைவர் பெ.இரா. முத்துசாமி, மற்றும் தலைமை இயக்க அதிகாரி (COO)மா. நடேசன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிவனடியார்களுக்கும் அர்ப்பணித்த நேச நாயனார்



தி கோவை ஹெரால்டு

பழம்பெரும் காம்பீலி எனும் வளமிக்கபூமியில்பிறந்துவளர்ந்தநேச நாயனார்,சைவசமயத்தின்புகழ்பெற்ற 63 நாயன்மார்களில் ஒருவராகச் சமூகத்தில் சிறப்புப் பெற்றார். இன்று கம்பிலி என்று அழைக்கப்படும் இந்த ஊர், துங்கபத்திரை ஆற்றின் கரையில் அமைந்தது. நேச நாயனார், தனது வாழ்நாளில் நேசன் என்றும், நேசநார் என்றும் அறியப்பட்டார்.

நேச நாயனார், திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பெற்ற விருபாக்ஷீஸ்வரர் கோயிலை வழிபட்டு, சிவபெருமான் மற்றும் சிவனடியாரை வழிபடுவதோடு, நெசவுத் தொழிலில் திறமை பெற்றவராக வாழ்ந்தார். இவரது தனித்துவமான பணிகளுள் ஒன்று, தன்னுடைய உறுப்புகளால் நெய்த ஆடைகள், கீழ் கோவணம் போன்ற தேவையான பொருட்களை சிவனடியாருக்கு தானமாக வழங்குவதும் ஆகும். இதன் மூலம், அவர் சிவபெருமான் அருளையும், சிவனடியாரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக வாழ்ந்தார்.

நேச நாயனாரின் வாழ்க்கை சேவை, பக்தி மற்றும் அர்ப்பணிப்பின் விளக்கமாகும். அவரது மனதில் எப்போதும் சிவபெருமான் நிலைபெற்றிருந்தது. வாயால் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை இடையறாது உச்சரித்தார், உடலால் திருத்தொண்டுகள்செய்து,தன்னுடைய வேலைகளை சிவபெருமான் அருளை நினைத்து செய்து வந்தார். இவர் சேவையாற்றியது தனித்துவமாக, சமூகத்தில் உயர்ந்த அறத்தை உணர்ந்து நடத்தப்பட்ட வாழ்கை எடுத்துக்காட்டாகும்.

வரலாற்றுப் புராணங்களில், நேச நாயனார் திருத்தொண்டத் தொகை மற்றும் பிற சைவ நூல்களில் புகழ்பெற்றவர். திருத்தொண்டத் தொகை, “நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்!” என்று குறிப்பிடுவதன் மூலம், அவரின் திறமை, சேவை மற்றும் பக்தியை புகழ்கிறது.

நேச நாயனார் தமது வாழ்நாளில் திருவடிகளை அடைந்து, நீங்கா இன்பம் பெற்றார்.

## பிச்சைக்காரராக வாழ்ந்த கோடீஸ்வரர்

### இந்தூரில் அதிர்ச்சி தகவல்

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில், பிச்சைக் காரர்கள் இல்லா நகரை உருவாக்கும் முயற்சியின் போது, அதிகாரிகள் அதிர்ச்சியூட்டும் தகவலை வெளிக் கொணர்ந்துள்ளனர். சாலையில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மங்கிலால் என்ற மாற்றுத்திறனாளி, பல லட்சம் மதிப்புள்ள சொத்துக் களை வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு துறை அதிகாரிகள் சாலையில் உள்ள இரும்பு ரிக்ஷாவில் அமர்ந்து பிச்சை எடுத்த மங்கிலாலை மீட்டனர். பின்னர் மேற்கொண்ட விசாரணையில்,



அவர் தினமும் ரூ.500 முதல் ரூ.1,000 வரை பிச்சை மூலம் சம்பாதிப்பதோடு, கோடீஸ்வரர் என்பதும் தெரியவந்தது.

மங்கிலாலுக்கு பகத்சிங் நகரில் மூன்று மாடி வீடு, சிவ் நகரில் 600 சதுர அடியில் வீடு மற்றும் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் அல்வாசாவில் வீடு என பல சொத்துகள் உள்ளன.

மேலும், மூன்று ஆட்டோ ரிக்ஷாக்களை வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானமும், Swift Dzire காரையும் வைத்திருப்பதாகவும் தெரிகிறது. அந்த காருக்காக தனியே ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிச்சை எடுப்பதை தவிர மங்கிலால், அதிக வட்டிக்கு கடன் வழங்கி வாராந்திரம், தினசரியாக வட்டி வசூல் செய்து வருகிறார்.

ஏற்கனவே சொந்த வீடு இருந்தும், அரசு வீடுத் திட்டத்தின் கீழ் வீடு பெற்றது குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக மங்கிலால் மாவட்டஆட்சியரின்முன்னிலையில் ஆஜராக உள்ளார்.

இந்த சம்பவம் பிச்சை தொழிலில் மறைந்திருக்கும் வருமானத்தைப் பற்றியும், அரசு நலத்திட்டங்களில் நடைபெறும் தவறான பயன்களைப் பற்றியும் புதிய கேள்விகளை எழுப்பி உள்ளது.

## முதல் வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயிலின் உணவுப் பட்டியல்

ஹவுரா காமாக்யா வழித்தடத்தில்இந்தியாவின் முதல் வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இரவு நேரப் பயணத்திற்குஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட இந்த புதிய சேவை, வேகமான மற்றும் நம்பகமான ரயில் வசதியாக கிழக்கு இந்தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு இடையிலான பயணத்தை எளிதாக்கியது.



இந்த ரயில் சுமார் 1,000 கிலோமீட்டர் தூரத்தை கடந்து செல்லும் திறன் கொண்டது. மொத்தம் 16 ஸ்லீப்பர் பெட்டிகளை கொண்ட இதில் 823 பயணிகள்பயணம்செய்யும் வசதி உள்ளது. தானியங்கி கதவுகள், மேம்பட்ட பாதுகாப்பு வசதிகள், கவச் தொழில்நுட்பம் மற்றும் மணிக்கு 130கிமீ வேகத்தில் செல்லும் திறன் உள்ளிட்ட பல நவீன அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இதனுடன், ரயிலில் வழங்கப்படும் உணவுப் பட்டியல் சிறப்பு கவனத்தை பெற்றுள்ளது. வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்களின் பாரம்பரிய சமையலை அடிப்படையாகக்கொண்டு, பயணிகளுக்கு சுவைமிகு உணவு வழங்கப்பட உள்ளது.ஐஆர்சிடிசிஉடன் இணைந்துகுவஹாத்தியின் மே∴பேர் ஸ்பிரிங் வேலி ரிசார்ட் இந்த மெனுவை தயாரித்துள்ளது.

பசந்தி புலாவ், சோளர் பருப்பு, மூங் தால், சனார் உணவுகள்போன்றவங்காள பாரம்பரிய உணவுகளும், ஜோஹா ரைஸ், மசூர் தால், பருவகால காய்கறி பஜ்ஜி போன்ற அசாம் சமையல் வகைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இனிப்புகளில் சந்தேஷ், ரசகுல்லா, நரிகோல் பர்பி போன்ற பாரம்பரிய இனிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இரவுபயணத்தில் சிரமமின்றி உணவு உண்ணும் வகையில், குறைந்த காரம் மற்றும் மென்மையான சுவையுடன் உணவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய ஸ்லீப்பர் வந்தே பாரத் சேவை பயணிகளிடம் மிகுந்தவரவேற்பைப்பெறும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

## கோவை ஜீவா இல்லத்தில் 63-ம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி

இந்திய கம்யூனிஸ்ட் பேரியக்கத்தில் முக்கிய தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவர் அமரர் ஜீவா என்று அனைவராலும் அழைக்கப்படும் ப.ஜீவானந்தம்.




அவரது 63-ம் ஆண்டு நினைவுதினமான ஜனவரி 18-ம்தேதிகட்சியின்மாவட்ட தலைமை அலுவலகமான கோவைஜீவா இல்லத்தில் உள்ள ஜீவா சிலைக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சார்பில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு கட்சியின் மாவட்ட செயலாளர் சிவசாமி தலைமை வகித்தார். கட்சியின் சார்பில் மாவட்ட துணை செயலாளர் தங்கவேல் மாலை அணிவித்தார். இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் பேபி மாலை அணிவித்தார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் மாவட்ட தலைவர் அபிமன் மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கட்சியின் மாநில பொருளாளர் ஆறுமுகம், மாவட்ட பொருளாளர் கல்யாணசுந்தரம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் குணசேகர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், மௌனசாமி, பாண்டியன், துரைசாமி, மோகன் சக்திவேல், மாநிலக் குழு உறுப்பினர் கலை அஸ்வினி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் அசரப்அலி, தொழிற்சங்க நிர்வாகிகள் தங்கராஜ், வேலுசாமி, சோமசுந்தரம், பூபதி, சம்பத், செல்வராஜ், கோட்டியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## மூலப்பொருட்கள் விலை உயர்வை கண்டித்து போராட்டம்

### கோவை தொழில் அமைப்புகள் கூட்டமைப்பு (போசியா) அறிவிப்பு

கோவை தொழில் அமைப்புகள் கூட்டமைப்பின்(போசியா) சிறப்பு கூட்டம்வெட்கிரைண்டர்சங்க அலுவலகத்தில் ஜனவரி 12-ம் தேதி செவ்வாய்க் கிழமை நடந்தது.



ஜேம்ஸ், நடராஜன், ரவீந்திரன் ஆகியோர் தலைமை வகித்தனர். கோவைதொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்களாக ஜேம்ஸ் சுருளிவேல் சிவ சண்முக குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் தொழில்துறையில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள்விலைகடந்தசில ஆண்டுகளாக நிலையற்ற தன்மை காணப்படுகிறது. இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சிண்டிகேட் அமைத்து விலையை உயர்த்திவருகின்றன. இதனால்குறு,சிறுமற்றும்நடுத்தர தொழில் நிறுவனங்கள் கடுமையான நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மத்திய அரசு மூலப்பொருட்கள் விலை உயர்வை தடுக்க ‘விலை நிர்ணய கமிட்டி’ அமைக்க வேண்டும்.

மூலப்பொருட்கள் விலை கட்டுப்பாட்டிற்குள் வரும்வரைவெளிநாடுகளில் இருந்து காப்பர் உள்ளிட்ட தொழில் சார்ந்த மூலப் பொருட்களுக்குஇறக்குமதி வரி விலக்கு அளிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கோவை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் கோவை மாவட்டத்தில் தொழில்வரி, ரன்னிங் லைசன்ஸ் எடுக்க வலியுறுத்தி கடுமையான நெருக்கடி கொடுப்பதால் தொழில்துறையினர் பாதிக்கப்படுகின்றனர். எனவே வரி என்ற பெயரில் நெருக்கடி கொடுக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 20 கிலோ வாட் மின் இணைப்பு பெற்றவர்களின் மின் இணைப்புக்கு ‘பவர் பேக்டில்’ இருந்து விலக்களிக்க வேண்டும்.

ஜிஎஸ்டி வரி திட்டத்தில் ஏற்கனவே சமர்ப்பித்த கணக்குகளை மீண்டும் கேட்டு தொல்லை கொடுக்கும் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை தொழில் அமைப்புகள் சார்பில், கோவையில் மாபெரும் போராட்டம் பிப்ரவரி மாதம் நடத்தப்படும் உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# நெல்சன் மண்டேலாவின் மனைவிக்கு இந்திரா காந்தி அமைதி விருது

தி கோவை ஹெரால்டு



சர்வதேச அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் வளர்ச்சிபணிகளில்சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டும் வகையில் வழங்கப்படும் ‘இந்திரா காந்தி அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் வளர்ச்சி விருது’ இந்தாண்டு தென்னாப்பிரிக்காவின் மனித உரிமை செயற்பாட்டாளர் கிரகா மச்செலுக்கு வழங்கப்படுகிறது.

இந்த விருது இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் நினைவாக ஆண்டுதோறும் இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளையால் வழங்கப்படுகிறது. விருதில் ரூ.1 கோடி ரொக்கப் பரிசு, பாராட்டுப் பத்திரம் மற்றும் சிறப்பு நினைவுக்கோப்பை அடங்கும்.

பின்தங்கிய சமூகங்களின் முன்னேற்றம், மனித உரிமைகளை பாதுகாப்பது, சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குதல் ஆகிய துறைகளில் வாழ்நாள் முழுவதும் ஆற்றிய பங்களிப்பிற்காக கிரகா மச்செல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

உலக வரலாற்றில் இரண்டு வெவ்வேறு நாடுகளில்—மொசாம்பிக் மற்றும் தென்னாப்பிரிக்கா—‘முதல் பெண்மணி’ (First Lady) என்ற பெருமை பெற்ற ஒரே நபர் கிரகா மச்செல்.

மொசாம்பிக் நாட்டின் முதல் கல்வி அமைச்சராக பணியாற்றிய அவர், நாட்டில் எழுத்தறிவின்மையை ஒழிக்க முக்கிய பங்காற்றினார். இவரின் முதல் கணவர் மொசாம்பிக் அதிபர் சமோரா மொயிசஸ் மச்செல். அவர் 1986-ல் மரணமடைந்த பின்னர், 1998-ல் தென்னாப்பிரிக்காவின் உலகப் புகழ் பெற்ற தலைவர் நெல்சன் மண்டேலாவை திருமணம் செய்து கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகள் மற்றும் பெண்களின் நலன்களுக்காக தீவிரமாகப் பணியாற்றி வரும் கிரகா மச்செல், உலகளாவிய மனிதாபிமான முயற்சிகளில் முன்னணி குரலாக விளங்குகிறார்.

# தரத்தில் என்றும் சமரசம் செய்து கொள்வதில்லை

## ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிர்வாக இயக்குனர் எம்.கிருஷ்ணன் உறுதி

தி கோவை ஹெரால்டு



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தயாரிப்புகளின் தரம் மற்றும் அதன் மூலப்பொருட்கள் குறித்து பரப்பப்படும் தவறான மற்றும் திசை திருப்பும் குற்றச்சாட்டுகளை கடுமையாக மறுப்பதாக ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிர்வாக இயக்குனர் எம்.கிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, எங்களின் எந்தவித இனிப்பு, காரம் மற்றும் பிற தயாரிப்புகளிலும், நெய்க்கு பதிலாக டால்டா போன்ற பொருட்களை நாங்கள் பயன்படுத்துவதில்லை.

எங்களின் நீண்டகால பாரம்பரிய செய்முறைப்படி, கடந்த பல ஆண்டுகளாக எங்களின் உலகப் புகழ்பெற்ற மைசூர்பா சுத்தமான நெய்யைக் கொண்டு மட்டுமே தயாரிக்கப் படுகிறது. 50 சதவீதம் டால்டா பயன்படுத்துவதாகக் கூறப்படும் எந்தவொரு தகவலும் உண்மைக்குப் புறம்பானது மற்றும் எங்கள் மீது சுமத்தப்படும் தவறான குற்றச்சாட்டாகும்.

அனைத்து உணவு தயாரிப்பு நிறுவனங்களிலும் வழக்கமான உணவுப் பாதுகாப்பு ஆய்வுகள் நடைபெறுவது இயல்பான ஒன்றுதான். அந்த வகையில் எங்கள் நிறுவனத்திலும் மேற்கொள்ளப்பட்டது. இதை பெரிய குற்றச்சாட்டு போல பரபரப்பாக பேசுகிறார்கள்.

எங்கள் தயாரிப்புகளில் டால்டா கலப்படம் இருப்பதாக எந்த ஆய்வக அறிக்கையும் உறுதிப் படுத்தவில்லை.

ஆதாரமற்ற மற்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களைப் பரப்புவது, பொதுமக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது எங்கள் மீதான நுகர்வோரின் நம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளது. இதுபோன்ற தவறான செய்தியால் எங்கள் நிறுவனத்தின் நற்பெய ருக்கு களங்கம் ஏற்படுகிறது.

உண்மை அல்லது சட்டப்பூர்வ அடிப்படை இல்லாமல் இத்தகைய பொய்களைத் தொடர்ந்து பரப்புபவர்கள் மீதும், சமூக வலைதளங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்கமாட்டோம்.

வரும் காலங்களில் இதுபோன்ற தவறான செய்திகளை பரப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.


கடந்த 50 வருடங்களுக் கும் மேலாக, நாங்கள் தூய்மை, வெளிப்படைத் தன்மை எத்தகையை விளம்பரங்களம் செய்யா மல் தரத்தால் மட்டுமே வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையை பெற்றுள்ளோம்.

எங்கள் தயாரிப்புகளை சோதனைகளுக்கு உட்படுத்துவதை நாங்கள் எப்போதும் வரவேற்கிறோம். மேலும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு தரத் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 5 வயது சிறுவனை கைது செய்த குடியேற்ற அதிகாரிகள்: அதிர்ந்த அமெரிக்கா






அமெரிக்கக் குடியேற்ற அதிகாரிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டறிந்து, கைது செய்து, காவலில் வைத்து, நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பிறகு, இத்தகைய நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளது. வீடுகள், வணிக வளாகங்கள், மெக்சிகோ உள்ளிட்ட நாட்டின் எல்லை பகுதிகளில் சோதனைகளை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 2025-2026ம் ஆண்டு காலக்கட்டத்தில் இந்தியர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் சட்டவிரோத குடியேறிகள் என்று அடையாளம் காணப்பட்டு , அமெரிக்காவை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். அகதிகளாக தஞ்சமடைந்தவர்களும் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகத்தில், பிற நாடுகளில் இருந்து குடியேறியவர்களுக்கு எதிராக கடுமையான ஒடுக்குமுறை தொடர்ந்து அரங்கேறி வருகிறது. இந்த நிலையில், கடந்த செவ்வாய்கிழமை மினசோட்டாவில் கொலம்பியா மழலையர் பள்ளியில் இருந்து 5 வயது ஈக்வடார் சிறுவன் ரமோஸ் ICE ஏஜன்டுகளால் தடுத்து வைக்கப்பட்டான். சிறுவனை வீட்டுக்கு அழைத்து செல்ல வந்திருந்த தந்தை கோனெஜா அரியாசும் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். மாஸ்க் அணிந்த ICE அதிகாரிகளுடன் சிறுவன் செல்லும் வீடியோக்கள் இணையத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிறுவன் மட்டுமல்ல 17 வயதிலுள்ள இரு சிறார்கள் மற்றும் 10 வயது சிறுவன் ஒருவனையும் ICE அதிகாரிகள் இந்த பள்ளியில் இருந்து அழைத்து சென்று விட்டனர்.

பின்னர், அதிகாரிகள் அந்த சிறுவனை டெக்ஸாஸின் புறநகர் பகுதியான டில்லி என்ற இடத்திலுள்ள குடும்ப தடுப்பு மையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு சிறுவனின் தாய் இருந்ததாக கூறப்படும் வீட்டின் கதவை சிறுவனை தட்ட கூறியுள்ளனர். ஆனால், அதற்கு முன்னதாக சிறுவனின் தந்தை மனைவியை போனில் தொடர்பு கொண்டு கதவை திறக்க வேண்டாம் என்று கூறி விட்டதால், அவர் கதவை திறக்கவில்லை. இதனால், குடியேற்ற அதிகாரிகளால் அந்த பெண்ணை கைது செய்ய முடியவில்லை.

இந்த சம்பவம் குறித்து கொலம்பியா பள்ளியின் சூப்பரிடென்டன்ட் ஜெனா ஸ்டென்விக் கூறுகையில், ‘‘சிறுவனின் வீட்டுக்கு சென்ற குடியேற்ற அதிகாரிகள் சிறுவனின் வீட்டு கதவை தட்ட கூறியுள்ளனர். அந்த வீட்டுக்குள் வேறு யாராவது தங்கியிருப்பார்களா? என்பதை அறிய அவர்கள் முயற்சித்துள்ளனர். வீட்டை திறக்க வைக்க சிறுவனை ஒரு கருவியாக பயன்படுத்தியுள்ளனர். கடந்த 2024ம் ஆண்டு ரமோஸின் குடும்பம் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளது. இந்த குடும்பத்தினர் புகலிடம் கோரிய வழக்கு அமெரிக்க நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அவர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்படவில்லை . அப்படியிருக்கையில், ஒரு 5 வயது குழந்தையை ஏன் காவலில் வைக்க வேண்டும்? இந்தக் குழந்தையை வன்முறைக் குற்றவாளியாக மிகைப்படுத்திக் காட்டுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார்.

# கோயம்பத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் சார்பில் டென்னிஸ் லீக் போட்டி

கோவையில் கடந்த 48-ஆண்டுகளாக நடைபெற்று வரும் டென்னிஸ் போட்டி ஜனவரி 24 முதல்

கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் சார்பில் கோவை மாவட்ட டென்னிஸ் சங்க லீக் 2026 போட்டிகள் நடைபெறுகிறது.

இப்போட்டிகள் வார இறுதி நாட்களில் காலை 7.00 மணி முதல் 11.00 வரையும், மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறும். இப்போட்டிகள் கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி மற்றும் நீலகிரி என ஒவ்வொரு மாவட்டங்களிலும் வார இறுதியில் நடைபெறவுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கத்தின் தலைவராக ஸ்ரீநிவாசன், செயலாளர் சதீஷ்; நாயர், துணைத் தலைவர் எ. ஆர். சேக்கலிங்கம், இணை செயலாளர் டாண்டு, துணைத் தலைவர் சதாசிவம் மற்றும் பொருளாளர் நரேந்திரன் உள்ளனர்


செய்தியாளர்களை சந்தித்த செயலாளர் சதீஷ்; நாயர் மற்றும் துணைத் தலைவர் எ.ஆர். சேக்கலிங்கம், கூறும்போது:-2026 ஆம் ஆண்டு லீக்கில் எ முதல் கே வரை 11 பிரிவுகளில் 116 அணிகள் மற்றும் சுமார் 1,200 வீரர்கள் பங்கேற்க உள்ளனர். 2024 இல் 109 அணிகளாக இருந்த லீக், 2025 இல் 111 அணிகளாக வளர்ச்சி பெற்றுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் இந்திய டென்னிஸ் வரலாற்றில் முக்கிய இடம் பெற்ற அமைப்பாகும். 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் டேவிஸ் கப் போட்டிகளை கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் வெற்றிகரமாக நடத்தியது. இதனைத் தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் தனது முதல் டென்னிஸ் லீக் போட்டியை தொடங்கியது.

2026 ஆம் ஆண்டு நடைபெறும் கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கத்தின் லீக், அதன் 48-வது ஆண்டாகும். கே. ஜி. ரமே, மனோஜ் ராகவன், ஸ்ரீராம் பாலாஜி, நிருபமா போன்ற உலகத் தர வீரர்களை உருவாக்கிய கோயம்புத்தூர், இன்று ஜூனியர் ஐடிஎஃப் (ITF) உலக தரவரிசையில் 34-வது இடத்தில் உள்ள மாயாவையும் வழங்கியுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட டென்னிஸ் அகாடமிகளுடன் இணைந்து, அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின் (AITA) அங்கீகாரம் பெற்ற போட்டிகளை அனைத்து பிரிவுகளிலும் கோயம்புத்தூர் மாவட்ட டென்னிஸ் சங்கம் நடத்தி வருகிறது. போட்டி அட்டவணை மற்றும் முடிவுகள் www.cdta.co.in என்ற இணையதளத்தில் காணலாம்.

# ஐஐடி வளாகங்களில் தொடரும் தற்கொலைகள் உயர்கல்விக்கு முன் நிலைகுலைக்கும் கேள்விகள்



நாடு முழுவதும் உயர் கல்வியின் அடையாளமாகக் கருதப்படும் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (IIT) மாணவர் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவது கல்வி வட்டாரத்திலும், சமூக மனநல வல்லுநர்களிடமும் கடும் கவலைக்குரிய விவகாரமாக மாறியுள்ளது.

2021 ஜனவரி முதல் 2025 டிசம்பர் வரையிலான நான்கு ஆண்டுகளில் மட்டுமே 65 மாணவர்கள் தற்கொலை செய்து வாழ்க்கையை முடித்துள்ளனர்.

ஆண்டுக்கு சராசரியாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 28 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில் கான்பூர், காரக்பூர், டெல்லி, ரூர்க்கி, குவஹாத்தி உள்ளிட்ட ஐஐடி வளாகங்கள் முன்னிலையில் உள்ளன.

நிபுணர்கள் இதற்கான காரணிகளாக கல்வி அழுத்தம், போட்டி மனப்பான்மை, மதிப்பெண் பயம், வளாகத்தில் உருவாகும் தனிமை மற்றும் சாதி-மொழிப் பாகுபாடுகளை சுட்டிக்காட்டுகின்றனர். மாணவர்கள் பெரும்பாலும் குடும்ப எதிர்பார்ப்புகள் மற்றும் சமூக அழுத்தங்களில் மனநல அடித்தளமே இல்லாமல் கல்வியில் போட்டியிட வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

இந்த தொடர்ச்சியான உயிரிழப்புகள் தனிப்பட்ட தீர்மானங்களின் விளைவு மட்டுமல்ல என்பதை கல்வி வட்டார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். மனநல ஆதரவு அமைப்புகள் தளர்வாக செயல்படுவது, பாகுபாட்டைத் தடுக்கும் தெளிவான கட்டமைப்பு இல்லாதது, மாணவர்களிடம் வகுத்துள்ள அதிகப்படியான எதிர்பார்ப்புகள் மற்றும் தளர்வற்ற மதிப்பீட்டு முறைகள் ஆகியவை அமைப்புச் சார்ந்த தோல்விகளாகக் கருதப் படுகின்றன.

உச்ச நீதிமன்றம் அண்மையில் மாணவர்களின் மனநல பாதுகாப்பு, வளாக அழுத்த சூழல் மற்றும் பாகுபாடு குறித்த புகார்களை ஆய்வு செய்ய உயர்மட்ட பணிக்குழுவை அமைத்துள்ளது.

இந்த குழு ஆய்வரங்குகள், வளாக விசாரணைகள் மற்றும் நிபுணர்கள் கருத்து கேட்பதன் மூலம் பரிந்துரைகள் சமர்ப்பிக்கவுள்ளது.

பல முன்னாள் ஐஐடி மாணவர்களின் கூற்றுப்படி, “தற்கொலைகள் மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினையல்ல; நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான தோல்வியின் விளைவு” என வலியுறுத்தப்பட்டுள்ளது.

உயர்கல்வி வளாகங்களில் மனநல ஆதரவு, இணைப்பு கலாச்சாரம், பாகுபாடு தடுப்பு, மதிப்பீட்டு சீர்திருத்தம் ஆகியவை செயல்படாத வரை இவ்வகை சம்பவங்கள் தொடரும் அபாயம் உள்ளது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தியா உலக வல்லரசு இலக்கை நோக்கி நகரும் நிலையில், எதிர்கால தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறையை நிர்ணயிக்க வேண்டிய இளம் திறமைகள் கல்வி வளாகங்களிலேயே உயிரிழப்பது கவலைக்குரியதாகும். கல்வி என்பது மனித வாழ்வை கட்டமைக்கும் கருவியாக இருந்து, அதே மனித வாழ்வை நசுக்கும் கருவியாக மாறக்கூடாது என்பதே கல்வி வட்டாரத்தின் பொதுக் கருத்தாக உள்ளது.

# கோவையில் மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்



தி கோவை ஹெரால்டு

2026 - தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், ரூட்ஸ் குழும நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா குழும நிறுவனங்கள் இணைந்து கோவையில் மாபெரும் ”தனியார் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் எஸ் என் ஆர் கலையரங்கத்தில் சனிக்கிழமை காலை 9:30 மணி துவங்கி மாலை 4:00 மணி வரை நடைபெற்றது.

இந்த வேலை வாய்ப்பு முகாமில் சுமார் 70-க்கும் மேற்பட்ட பெரு நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்றன. 500-க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

முன்னதாக நடைபெற்ற துவக்க விழாவிற்கு வந்திருந்தவர்களை ஸ்ரீ ராமகிருஷ்ண பொறியியல் கல்லூரியின், பேராசிரியர் முனைவர் பிரவீன் குமார் வரவேற்றார்.

எஸ்.என்.ஆர். அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் எஸ் நரேந்திரன் தலைமை வகித்தார்.

கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மையத்தின் துணை இயக்குனர் எம் கருணாகரன் துவக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக, நிரல் மேலாளர், கனிமொழி வாழ்த்துரை வழங்கினார்.

ரூட்ஸ் குழும நிறுவனங்களின் மனித வள மேம்பாட்டு துறை, இயக்குனர், முனைவர் கவிஞர் கவிதாசன் சிறப்புரையாற்றினார்.

## பை... பை... ஸ்டாலின்...
# மோடி முன்னிலையில்
## எடப்பாடி பழனிசாமி உற்சாக பேச்சு



மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடிபழனிசாமி, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், பாமக தலைவர் அன்புமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடிபழனிசாமிபேசியதாவது,

நம்மை எதிர்ப்பவர்கள் எத்தகைய வஞ்சக நெஞ்சம் கொண்டவர்களாக இருந்தாலும் தீயவர்களாக இருந்தாலும் உரிய காலத்தில் உரிய இடத்தில் உரியவர்களோடு ஒன்றிணைந்து உறுதியாக செயல்பட்டால் வெற்றி நிச்சயம். அத்தகையதருணம் இப்போது கிடைத்திருக்கிறது. திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டுகளில் ஊழல் மட்டுமே அதிகரித்துள்ளது. அனைத்துத் துறைகளிலும் லஞ்சமும் ஊழலும் மலிந்துவிட்டன. மக்களை வாட்டி வதைக்கு அரசாங்கம் தேவையா? ஒரு குடும்பம் வாழ்வதற்காக 8 கோடி மக்களை சுரண்டுவது நியாயமா? இன்றைக்கு தமிழகத்தை கருணாநிதி குடும்பம் ஆட்சியில் அமர்ந்து கொள்ளையடித்து கொண்டிருக்கிறது.

ஸ்டாலின் செய்த சாதனை ஒன்றே ஒன்று. ஊழல்... ஊழல் ஊழல்... இன்று அவரது குடும்பம் உலக அளவில் பணக்கார குடும்பமாக இருக்கிறது. எந்த தகுதியும் இல்லாத உதயநிதியை எம்.எல்.ஏ., அமைச்சர், துணை முதலமைச்சராக்கியிருக்கிறார். இனி எப்போதும் அந்த குடும்பம் ஆட்சிக்கு வர முடியாது. தீய சக்தி திமுகவை வீழ்த்துவோம். தேஜகூ சக்தியால் இந்த ஆட்சியைவீழ்த்துவோம். பிரதமர் நமக்கு உறுதுணையாக இருக்கிறார் 2026 தேர்தல் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டும் தேர்தல் மத்திய அரசு தமிழகத்துக்கு எதுவும் செய்யவில்லை என்று ஸ்டாலின் சொல்லி கொண்டிருக்கிறார். ஆனால் அதிமுக ஆட்சியில் மத்தியிலிருந்து பல திட்டங்களைபெற்றோம். கேட்டநிதிகளை கொடுத்தார்கள். அதிகமாக ரயில்வே பாலங்களை கொடுத்தார்கள். தேசிய நெடுஞ்சாலைகள வழங்கினார்கள். மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்துக்கு அனுமதி கொடுத்து அடிக்கல் நாட்டப்பட்டது. இப்படி மத்திய அரசு தமிழகத்திற்குப் பலதிட்டங்களைக் கொடுத்துள்ளது. ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் வழங்கியது பிரதமர் மோடியின் மிகப்பெரிய சாதனை. சுமார் 14,000 கோடி மதிப்பிலான காவிரி நதி சுத்திகரிப்புத் திட்டத்திற்கு பிரதமர் அனுமதி வழங்கினார், ஆனால் திமுக அரசு அரசியல் காரணங்களுக்காக அதை முடக்கிவைத்துள்ளது. உலகமே திணறிய கொரோனா காலத்தில், தடுப்பூசி மற்றும் மருந்துகளை கொடுத்து லட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியவர் பிரதமர் மோடி.

தேசிய ஜனநாயக கூட்டணி இந்தத் தேர்தலில் 210-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் அதிமுக ஆட்சி அமையும். அண்ணா, எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் கனவுகளை இந்த வலுவான கூட்டணி நிறைவேற்றும். பை... பை... ஸ்டாலின்"

இவ்வாறு அவர் கூறினார்.

# ராயல் கேர் நர்சிங் கல்லூரியில் விளக்கேற்றுதல் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி






தி கோவை ஹெரால்டு

ராயல் கேர் நர்சிங் கல்லூரியில் நைட்டிங்கேல் அம்மையாரை நினைவு கூறும் வகையில் விளக்கேற்றுதல் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி ராமலக்ஷ்மி மஹாலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ராயல் கேர் நர்சிங் கல்லூரியின் முதல்வர் டாக்டர் கவிதா வரவேற்புரை வழங்கினார். ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் ராயல் கேர் நர்சிங் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் கே.மாதேஸ்வரன் நிகழ்ச்சியில் தலைமை தாங்கினார். தனதுதலைமை உரையில் நோயாளிகளின் முன்னேற்றத்தில் செவிலியர்களின் முக்கியத் துவத்தை விளக்கினார். தலைமை உரையை தொடர்ந்து சிறப்பு விருந்தினராக பங்கேற்ற டாக்டர் ஜெயினி கெம்ப், தெற்கு மண்டல முன்னாள் துணைத் தலைவர் சிறப்புரை ஆற்றினார்.

பேராசிரியர் ஸ்மிதா நைட்டிங்கேல் உறுதிமொழி வாசிக்க, பி.எஸ்.சி நர்சிங் மற்றும் டி.ஜி.என்.எம் முதலாம் ஆண்டு மாணவ-மாணவிகள் நைட்டிங்கேல் உறுதிமொழி ஏற்றனர்.

# குமரகுரு கல்வி நிறுவனங்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்த வட்டமேசை மாநாடு




குமரகுரு கல்வி நிறுவனங்கள் மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) இணைந்து 'புலம்பெயர் தொழிலாளர்கள்' குறித்த தேசிய வட்டமேசை மாநாட்டை நடத்தின. எம்எஸ்எம்இ, வெளியுறவுத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் சர்வதேச குடியேற்ற அமைப்பு அதிகாரிகள் பங்கேற்றனர்.


தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் குமார் ஜெயந்த் தொடங்கி வைத்த நிகழ்வில் 'புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தொழில் நடைமுறைகள்' குறித்த சிஐஐ தொகுப்பு வெளியிடப்பட்டது. மத்திய தொழிலாளர் அமைச்சர் மன்சுக் மாண்டவியா காணொளி மூலம் உரையாற்றி, "புலம்பெயர் தொழிலாளர்கள் இந்திய வளர்ச்சியின் முதுகெலும்பு," எனக்குறிப்பிட்டார். சிஐஐ தேசிய பணிக்குழு தலைவர் சங்கர் வானவராயர், தொழிலாளர்களின் கண்ணியமும் சமூகப் பாதுகாப்பும் அவசியம் என வலியுறுத்தினார். ஐஓஎம் தலைவர் சஞ்சய் அவஸ்தி, "உள்நாட்டு இடம் பெயர்வு தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை" என கூறினார்.

இந்த மாநாடு, புலம்பெயர் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு மற்றும் கொள்கை மாற்றங்கள் குறித்து முக்கிய விவாதங்களுக்கான மேடையாக அமைந்தது.



# கவுன்சிலர் டு யூடியூபர்... போலி பாலியல் வீடியோ வெளியிட்ட ஷிம்ஜிதா முஸ்தபா யார்?

## கேரளாவில் தற்கொலை செய்த அப்பாவி விவகாரத்தில் பரபர தகவல்கள்





தி கோவை ஹெரால்டு

கேரள மாநிலம் கோழிக்கோடு கோவிந்தபுரம் பகுதியை சேர்ந்தவர் தீபக் (42). டெக்ஸ்டைல் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இவர், கடந்த 16ம் தேதி கண்ணூருக்கு கே.எஸ்.ஆர்.டி.சி பேருந்தில் சென்ற போது, அருகில் நின்று பயணித்த இளம்பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதாக, அந்த பெண் வீடியோ எடுத்து பதிவிட்டிருந்தார். இந்த வீடியோ வைரலானதையடுத்து , தீபக்கை உறவினர்கள் , நண்பர்கள் தவறாக பேசியதாக தெரிகிறது. சோசியல் மீடியாவிலும் பலரும் விமர்சித்திருந்தனர். இதனால், அவமானம் தாங்க முடியாமல் தீபக், கடந்த 18ம் தேதி இரவு 7 மணியளவில் தனது வீட்டில் உயிரை மாய்த்து கொண்டார். தீபக்கின் தற்கொலைக்கு பிறகு, சோசியல் மீடியாவின் முகம் மாறியது. அந்த பெண்தான் தீபக் மீது வேண்டுமென்றே உரசி, வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளார். வியூஸ்க்காக அந்த பெண் இத்தகைய மோசமான செயலில் இறங்கியதாகவும் நெட்டிசன்கள் குற்றம் சாட்ட தொடங்கினர்.

இந்த நிலையில், தீபக்கின் நெருங்கிய நண்பரான அக் ஷர் அலி என்பவர் நடந்த சம்பவம் குறித்து சில விஷயங்களை தெரிவித்துள்ளார். அவர், கூறுகையில், " சிதைந்த குடும்ப வாழ்க்கையில் இருந்து தீபக் மீண்டு வந்து கொண்டிருந்தார் .அந்த வீடியோவை நான்தான் முதன் முதலில் பார்த்து தீபக்கிடம் கூறினேன். அதுவரை, தீபக்குக்கு அப்படி ஒரு சம்பவம் நடந்ததே தெரியாமல்தான் இருந்தார். தீபக் ஏதாவது தவறான செயலில் ஈடுபட்டிருந்தார் என்றால் , அது பற்றி தெரியாமல் இருப்பாரா? . அவர் ஒரு அப்பாவி. இந்த விவகாரத்தால் அவர் மிகுந்த மன உளைச்சலில் இருந்தார். அதே தருணத்தில், உண்மை அறியாமல் , பலரும் அவரை விமர்சிக்க தொடங்கியிருந்தனர். கடைசியாக நான் அவரிடத்தில் பேசிய போது,' வக்கீலை அணுகி அந்த பெண் மீது மானநஷ்ட வழக்கு தொடர வேண்டும்' என்று கூறினார். ஆனால், இப்படி ஒரு சோகமான முடிவை எடுத்து விட்டார். அந்த பெண்ணை கண்டிப்பாக கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் "என்றார்.

பலரும், அந்த பெண்ணை கைது செய்து, உண்மையை கண்டறிய வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர். இதற்கிடையே, அந்த பெண் தீபக் தொடர்பான வீடியோவை தனது இன்ஸ்டா பக்கத்தில் இருந்து டெலிட் செய்து விட்டார். பின்னர், தனது செய்கைக்கு விளக்கம் அளித்து மற்றொரு வீடியோவை வெளியிட்டுள்ளார்.

தீபக்கின் குடும்பத்தினர் கோழிக்கோடு மாவட்ட போலீஸ் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடத்தில் தீபக்கின் மரணத்துக்கு காரணமானவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

தீபக் வீடு இருக்கும் வார்டு பகுதியைச் சேர்ந்த கவுன்சிலர் இந்திரா கூறுகையில், "தீபக் மீது இது போன்று எந்த குற்றச்சாட்டும் இதற்கு முன், வந்ததில்லை. மிகவும் ஒழுக்கமான குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோர் மீது மிகுந்த அன்பு கொண்டவர். தனது மகனை வளர்த்து கொண்டிருந்த தந்தை அவர். தீபக்கின் இறப்புக்கு காரணமானவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்களின் ஒரே கோரிக்கை" என்று தெரிவித்துள்ளார்.

கேரள ஆண்கள் சங்கம் மற்றும் மனித உரிமை ஆணையமும் இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளன.

தீபக் மீது குற்றம்சாட்டி வீடியோ வெளியிட்ட ஷிம்ஜிதா முஸ்தபா (வயது 35) என்ற பெண் கோழிக்கோடு அருகேயுள்ள வடகராவைச் சேர்ந்தவர். 16 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. திருமணத்துக்கு பிறகு, வெல்லேரி என்ற பகுதிக்கு குடி பெயர்ந்துள்ளார். இவரின், கணவர் துபாயில் பணி புரிந்துள்ளார். கடந்த 2020ம் ஆண்டு வெல்லேரி வார்டில் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சி சார்பாக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு கவுன்சிலராகவும் தேர்வு செய்யப்பட்டார். இந்த வார்டில் 3 ஆண்டுகள் கவுன்சிலராக இருந்த ஷிம்ஜிதா துபாய் சென்றுள்ளார். அங்கு, ஒரு நிறுவனத்தில் கணக்காளராக பணிபுரிந்துள்ளார். தொடர்ந்து, கணவருடன் கேரளா திரும்பியவர், தனது கவுன்சிலர் பதவியைராஜினாமா செய்துவிட்டு, சோசியல் மீடியாவில் ஆக்டிவாக இருந்துள்ளார்.

தீபக் தற்கொலை தொடர்பாக, கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி காவல் நிலையத்தில் முதலில் 'இயற்கைக்கு மாறான மரணம்' என்று வழக்கு பதியப்பட்டிருந்தது. தீபக்கின் குடும்பத்தினர் அளித்த புகாரையடுத்து, தற்கொலைக்குத் தூண்டியதாக பிஎன்எஸ் பிரிவு 108-ன் கீழ் ஷிம்ஜிதா முஸ்தபா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதால், குற்றம் உறுதி செய்யப்பட்டால் 8 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் கிடைக்கலாம். ஜாமீன் மறுக்கப்படவும் வாய்ப்புள்ளது. இந்த நிலையில், ஷிம்ஜிதா நேற்று கோழிக்கோடு போலீசரால் கைது செய்யப்பட்டார். வடகராவிலுள்ள தன் வீட்டில் இருந்து தலைமறைவாகிய அவர், உறவினர் வீட்டில் கைது செய்யப்பட்டார். பின்னர், போலீசார் தங்கள் வாகனத்தில் அழைத்து செல்லாமல் தனியார் வாகனத்தில் அவரை ரகசியமாக குன்னங்குளம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தனர். மக்கள் போராட்டத்தில் ஈடுபட வாய்ப்பிருந்தால், அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதை போலீசார் ரகசியமாக வைத்திருந்தனர். நீதிமன்றத்தில் 30 போலீசாருக்கு மேல் குவிக்கப்பட்டிருந்தனர். ஷிம்ஜிதாவை 14 நாட்கள் ரிமான்டில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தசம்பவத்தைதொடர்ந்துகேரளாவில் பையனூர்- ராமன்தாலி இடையே ஓடும் தனியார் பேருந்து ஒன்றில் ,'பேருந்தில் பெண்கள் இருக்கிறார்கள்... ஜாக்கிரதை' என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்த புகைப்படமும் இணையத்தில் வைரலாகியுள்ளது.

### குழந்தைகளுடன் தவிக்கும் கணவர்

தீபக் தற்கொலையால் கைது செய்யப்பட்டுள்ள ஷிம்ஜிதாவின் கணவர் பெயர் முஸ்தபா. இவர், தனது சொந்த ஊரான அரிகோட் பகுதியில் சலூன் வைத்து நடத்தி வருகிறார். உள்ளூர் மக்களிடத்தில் நன்றாக பழகும் தன்மை கொண்டவர். இவரை, அந்த ஊர் மக்கள் பாபு என்று செல்லமாக அழைத்து வந்துள்ளனர். சோசியல் மீடியாவில் மனைவியின் செயல்பாடுகள் பிடிக்காமல் முஸ்தபா மனைவியை அடிக்கடி கண்டித்து வந்துள்ளார். ஆனால், ஷிம்ஜிதா, இது எனது உரிமை... என்னை யாரும் தடுக்க முடியாது என்று கணவரிடத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பிரிந்து சென்று விட்டார். இதனால், தனது இரு குழந்தைகளுடன் முஸ்தபா தனியாக வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில், ஷிம்ஜிதா தீபக் விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதால், பலரும் முஸ்தபாவையும் விமர்சிக்க தொடங்கினர். இதனால், கடந்த ஒரு வார காலமாக தனது சலூனை திறந்து பணி செய்ய முடியாமல் முஸ்தபா தவித்து வருகிறார்.

# ராகுல்காந்திக்கும் சசி தரூருக்கும் மோதல்

## ஆலோசனை கூட்டத்தை புறக்கணித்த பின்னணி

ஆபரேஷன் சிந்தூர் தாக்கு தலையடுத்து, பாகிஸ்தானின் பயங்கரவாத முகத்தை அம்பலப் படுத்தும் நோக்கில் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் இந்தியா சார்பில் நாடாளுமன்றக் குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டன. காங்கிரஸ் மூத்த தலைவர் சசி தரூர் தலைமையிலான குழு, அமெரிக்கா, பனாமா, கயானா, பிரேசில், கொலம்பியா உள்ளிட்ட நாடுகளில் பயணம் மேற்கொண்டது.





பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் ராணுவ நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூரின் தொடக்கத்தில் இருந்து மத்திய அரசுக்கு ஆதரவாக சசி தரூர் பேசி வந்தார். வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதுக்குழுவில் இடம்பெறக் கூடிய 4 எம்பிக்களின் பெயரை மத்திய அரசு காங்கிரஸ் கட்சியிடம் கேட்டிருந்த நிலையில், காங்கிரஸ் அளித்த பெயர்களில் சசி தரூரின் பெயர் இடம்பெறவில்லை. எனினும், மத்திய அரசு அவரது பெயரை இணைத்ததோடு மட்டுமல்லாமல், அவரது தலைமையில் அமெரிக்கா உள்ளிட்ட முக்கிய நாடுகளுக்குச் செல்லும் குழுவையும் அமைத்தது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை காங்கிரஸ் ஆதரித்தாலும், மத்திய அரசு அதனை அமல்படுத்திய விதத்தில் விமர்சனத்தை முன்வைத்து வருகிறது. எனினும், சசிதரூர் மத்திய அரசை முழுமையாக ஆதரித்துப் பேசி வந்தார். இந்த பயணத்தின் போது, சசி தரூர் மிகச் சிறப்பாக செயல்படுவதாகவும், அவரது உரை கவரக்கூடியதாக இருந்ததாகவும் சமூக ஊடகங்களில் பாஜகவினர் கருத்து தெரிவித்தனர்.

தென் அமெரிக்க நாடான பனாமாவில் வசித்த இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய சசி தரூர், “இந்தியா அமைதியாக இருக்க விரும்புகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக எல்லையின் மறுபக்கத்திலுள்ள நண்பர்கள் அதை விரும்புவதில்லை.

கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக நாங்கள் தொடர் தாக்குதல்களைச் சந்தித்துள்ளோம். பயங்கரவாதிகளை கையாள்வதில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்னவென்றால், பயங்கரவாதிகள் தாங்கள் கொடுக்க வேண்டிய விலையை உடனேயே பெற்றுவிடுகின்றனர்'' என்று பேசியிருந்தார்.

அவரது பேச்சுக்கு மிகுந்த வரவேற்பும் இருந்தது. இந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் எம்பியுமான உதித் ராஜ், பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆதரவாகப் பேசுவதில் பாஜகவினரை விஞ்சும் வகையில் அக்கட்சியின் சூப்பர் செய்தித் தொடர்பாளர் போலவே சசி தரூர் செயல்படுவதாக விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருந்த எக்ஸ் பதிவில், ” சசி தரூர், நீங்கள் இந்தியாவில் தரை இறங்கும் முன் பிரதமர் மோடி உங்களை பாஜகவின் சூப்பர் செய்தித் தொடர்பாளராக அறிவிக்கலாம், ஏன் வெளியுறவு அமைச்சராகவும் கூட அறிவிக்கலாம். உங்களுக்கு அத்தனையும் அள்ளிக் கொடுத்த கட்சிக்கு நீங்கள் எப்படி இவ்வளவு நேர்மையற்றவராக இருக்க முடியும்?” என்று கேள்வி எழுப்பியிருந்தார். உதித் ராஜ் மட்டுமல்ல பல காங்கிரஸ்காரர்களும் சசி தரூரை விமர்சிக்க தொடங்கினர்.

திருவனந்தபுரத்தில் இருந்து 4 முறை எம்.பியாக தேர்வு செய்யப்பட்டுள்ள சசி தரூர் சமீபத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும் முன்னாள் பாஜக எம்.பியுமான கவுதம் கம்பிருடன் சேர்ந்து செல்பி எடுத்தார். அந்த புகைப்படத்தை எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட அவர், ‘பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்தபடியாக, இந்தியாவில் ‘இரண்டாவது கடினமான வேலையை’ கம்பீர் செய்வதாகக் கூறி அவரைப் பாராட்டிருந்தார். இதுவும், காங்கிரஸ் கட்சிக்காரர்களின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கச் செய்தது.

இந்த சமயத்தில் காங்கிரஸ் காரர்களின் கோபத்தை மேலும் தூண்டி விடும் வகையில், பாஜகவின் ஷேசாத் பூனாவாலா, கம்பீரின் பயிற்சி மற்றும் தந்திரங்களை கிரிக்கெட் ரசிகர்கள் விமர்சிப்பது போல, எதிர்க்கட்சிகள் பிரதமரையும் விமர்சிப்பதாகக் கூறி, தரூரின் கருத்துடன் அதை ஒப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் தேசிய நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். பிரதமர் மோடிக்குத்தான் இந்தியாவில் மிகவும் கடினமான வேலை என்பதை தரூர் ஒப்புக்கொண்டிருக்கிறார்... ஏனெனில், நாட்டின் நலன்களை விட குடும்ப நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் எதிர்க்கட்சிகளால் பிரதமர் தொடர்ந்து விமர்சிக்கப்படுகிறார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் காரணமாக, காங்கிரஸ் கட்சி தலைமைக்கும் சசி தரூருக்கும் மோதல் உச்சத்தை எட்டியுள்ளதாக கூறப்படுகிறது . காங்கிரஸ் கட்சிக்குள் தொடர்ந்து சசி தரூரை அவமதிக்க தொடங்கியுள்ளதாகவும் அவமரியாதை செய்வதாகவும் அவர் கருதுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில், கொச்சியில் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் கொச்சியில் நடந்தது. கூட்டத்தில் ராகுல்காந்தி, கார்கே ஆகியோர் பங்கேற்றனர். கேரள காங்கிரஸ்ஸின் மூத்த தலைவர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர். ஆனால், சசி தரூர் மட்டும் ஆப்சென்ட் ஆகி விட்டார்.

கடந்த வாரத்தில் கொச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராகுல்காந்தி பங்கேற்றார். கேரள பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்காக நடத்தப்பட்ட பாராட்டு கூட்டம் அது. கூட்டத்தில் பங்கேற்க, ராகுல் குறிப்பிட்ட நேரத்தை விட தாமதமாக வந்திருந்தார். இந்த தருணத்தில் மேடையில் இருந்து சசி தரூர் வெளியேறினார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. அதோடு, பஹல்காம் தாக்குதலை பாஜக அரசு கையாண்ட விதத்திற்கு சசி தரூர் தொடர்ந்து ஆதரவளித்து வருவதால், காங்கிரஸ் தலைவர் கே. முரளீதரன் கடும் காட்டத்தில் உள்ளார். ‘சசிதரூர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் வரை, திருவனந்தபுரத்தில் நடைபெறும் எந்தக் கட்சி நிகழ்ச்சிக்கும் அவரை நாங்கள் அழைக்க மாட்டோம். அவர் எங்களில் ஒருவர் அல்ல என்று வெளிப்படையாகவே ‘ குறை கூறியுள்ளார்.

கேரள சட்டமன்ற தேர்தல் 2026 ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற வாய்ப்புள்ளது. கேரளத்தின் மிகவும் பிரபலமான காங்கிரஸ் முகமான சசி தரூருக்கு கேரளாவின் முதலமைச்சர் வேட்பாளராக தன்னை அறிவிக்க வேண்டும் என்பது ஆசை. இதற்காக, கடந்த ஜனவரி 18 ம் தேதி டெல்லி சென்று ராகுல் காந்தியைச் சந்தித்து பேசினார். அப்போது, தேர்தலுக்கு முன்னரே முதலமைச்சர் வேட்பாளரைத் அறிவிக்கும் வழக்கம் காங்கிரஸ் கட்சிக்கு இல்லை என்று ராகுல் காந்தி முகத்தில் அடித்தது போல சொன்னதாக தெரிகிறது. இதனால், சசி தரூர் ரொம்பவே அப்செட் ஆகி விட்டாராம். இதையடுத்தே, ராகுல் காந்தி பங்கேற்ற இந்த முக்கிய கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை என்று சொல்லப்படுகிறது.

# வங்கிக் கணக்கை ஆன்லைனில் மூடலாம்

## தெரிய வேண்டிய நடைமுறைகள்

இன்றைய டிஜிட்டல் காலத்தில் வங்கிக் கணக்குகளை வங்கி கிளைக்கு செல்லாமல் ஆன்லைனில் மூடுவதற்கான வசதியை பல வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ளன. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் நேரமும் உழைப்பும் மிச்சப்படுத்த முடிகிறது. இதற்கான படிப்படியான நடைமுறையை வங்கிவட்டாரங்கள் விளக்கி யுள்ளன.

முதலில், வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கியின் இணையவங்கி அல்லது மொபைல் வங்கி பயன்பாட்டில் பதிவுசெய்யப்பட்ட விவரங்களைக் கொண்டு உள்நுழைய வேண்டும். அதன்பின், ‘சேவை கோரிக்கைகள்’ அல்லது ‘கணக்கு சேவைகள்’ எனும் பிரிவில் கணக்கு மூடும் விருப்பத்தைத் தேர்வுசெய்ய வேண்டும். கணக்கை மூடும் காரணத்தைக் குறிப்பிட்டு, டிஜிட்டல் கணக்குமூடல் படிவத்தை நிரப்ப வேண்டும்.

பின்னர் அடையாளச் சான்று உள்ளிட்ட தேவையான ஆவணங்களைப் பதிவேற்ற வேண்டும். கணக்கில் இருப்புப் பணம் இருப்பின், அதை வேறு கணக்கிற்கு மாற்றுவது அல்லது மாற்ற வேண்டிய கணக்கின் விவரங்களை வழங்குவது அவசியம். அதன் பின்பு OTP அல்லது மின்னஞ்சல் மூலம் கோரிக்கை உறுதிப் படுத்தப்படும்.

கோரிக்கை சமர்ப்பிக்கப் பட்ட பின் உறுதிப்படுத்தல் செய்தி அனுப்பப்படும். இந்த மூடல் கோரிக்கையை செயல்படுத்த வங்கிக்கு சில வேலை நாட்கள் ஆகும் என வங்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் தேவையாக இருக்கக்கூடிய கணக்கு அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை வாடிக்கையாளர்கள் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

ஆனால் சில வங்கிகள் டெபிட் கார்டு மற்றும் பயன்படுத்தப்படாத காசோலை புத்தகங்களை கிளைக்குச் சென்று ஒப்படைக்கும்படி கோரலாம். சில சந்தர்ப்பங்களில் சரிபார்ப்புக்காக வங்கிக்குச் சென்று கையொப்பமிட வேண்டிய நிலையும் உருவாகலாம். இதனால், கணக்குமூடல் முழுமையாக இணையத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் என்றாலும், சில வங்கிகளில் ஓரளவு ஆஃப்லைன் நடைமுறையும் நீடிக்கிறது.

# முகத்தை பளபளப்பாக்கும் பப்பாளி

## நடிகை பார்வதி தரும் டிப்ஸ்



சீரியல் நடிகை பார்வதி சமீபத்தில் தனது அழகு ரகசியத்தை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். அவர் கூறியதாவது, தக்காளி மற்றும் சர்க்கரை கலவையால் செய்யும் எளிய ஸ்க்ரப் முகத்தின் தோற்றத்தை மெல்லவும், பளபளப்பாகவும் மாற்றுவதோடு, இறந்த செல் நசிகளை அகற்றி, கரும்புள்ளிகளை குறைக்கும் ஒரு இயற்கை வீட்டு வைத்தியம் ஆகும். இதற்காக பாதியளவு பழுத்த தக்காளியை எடுத்து அதில் சிறிதளவு சர்க்கரையை சேர்த்து நன்குகலக்கி, முகம் மற்றும் கழுத்தில் மென்மையாக போட வேண்டும். 510 நிமிடங்கள் கழித்து, பின்னர் வெதுவெதுப்பான நீரில் சுத்தமாக கழுவினால் சருமம் மென்மையும், பளபளப்பும் கூடும்.

இந்த ஸ்க்ரப்பை வாரத்திற்கு ஒரு முறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்துவது போதும். முகத்தை அதிகமாக உருட்டுவது சருமத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தக்கூடியதால், மென்மையாக மட்டுமே ஸ்க்ரப் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. தேவையானால் சிறிது தேங்காய் எண்ணெய் சேர்க்கலாம்; இது உலர் சருமத்திற்கு கூடுதல் நியமமான மென்மை அளிக்கும். இயற்கை பொருட்கள் மட்டுமே பயன்படுத்துவதால் இதுமிகவும் பாதுகாப்பானது. நீண்டகாலத்தில் தொடர்ந்து பயன்படுத்தினால் முகத்தில் உள்ள கரும் புள்ளிகள், கறுப்புதுளைகள் குறையுவதோடு சருமம் ஆரோக்கியமாக மாறும் . இதனை வீட்டு முறையில் எளிதாக செய்யக்கூடியது என்றும், குறைந்த செலவில் அழகையும் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதற்கு சிறந்த வழி. இதனை தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் தோல் ஒழுக்கம், மென்மை மற்றும் பளபளப்பை அடைய முடியும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கரகாட்டக்காரன் படத்தை மிஸ் செய்துவிட்டேன்

## வருத்தப்படும் நடிகை ஷோபனா



கடந்த 1989-ம் ஆண்டு கங்கை அமரன் இயக்கத்தில் வெளியான படம் கரகாட்டக்காரன். ராமராஜன் நாயகனாக நடித்திருந்த இந்த படத்தின் மூலம் நடிகை கனகா தமிழ் சினிமாவில் அறிமுகமானர். மேலும் கவுண்டமணி செந்தில், கோவை சரளா, காந்திமதி, சண்முகசுந்தரம், சந்தானபாரதி, சந்திரசேகர் உள்ளிட்ட பலர் நடித்திருந்த இந்தபடத்திற்கு, இளையராஜா இசையமைத்திருந்தார்.

2 கரகாட்ட கோஷ்டிக்கு இடையே நடக்கும் சம்பவங்களை காமெடியாக சொல்லிய இந்த படத்தில், கவுண்டமணி செந்தில் நடித்த காமெடி காட்சிகள் இன்றும் பேசப்பட்டு வருகிறது. தனித்தன்மையுடன் இருக்கும் கரகாட்டக்காரன் படத்தில், வரும் வாழைப்பழ காமெடி, அனைத்து தரப்பு மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு காமெடி காட்சியாக பேசப்பட்டு வருகிறது. இந்த படம் தான் கனகா அறிமுகமான முதல் படம். தமிழ் சிமாவில் மாபெரும் வெற்றி இந்த படத்திற்கு கிடைத்த்து.


கனகா இந்த படத்தின் மூலம் அறிமுகமாகி இருந்தாலும் இந்த படத்தில் முதலில் நடிக்க இருந்தவர், பரதநாட்டிய நடிகை. ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், சத்யராஜ் என பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து வெற்றிப்படங்களை கொடுத்துள்ள இந்த நடிகை, ரஜினியுடன் இணைந்து பல படங்களில் நடித்துள்ளார். அந்த நடிகை வேறு யாரும் இல்லை ஷோபனா தான். ரஜினிகாந்துடன் தளபதி, சிவா உள்ளிட்ட சில படங்களில் நடித்துள்ள இவர் தான் கரகாட்டக்காரன் படத்தில் முதல் நாயகி.

டான்ஸ்க்கு முக்கியத்துவம் உள்ள படம் என்பதால் என்னை கேட்டார்கள். ஆனால் அப்போது தவிர்க்க முடியாத காரணங்களால் என்னால் அந்த படத்தில் நடிக்க முடியவில்லை. அதேபோல் மோகன்லால் நடிப்பில் வெளியாகி பெரிய ஹிட்டான த்ரிஷ்யம் படத்தில் நடிக்க சொல்லி ஸ்கிரிப்ட் கூட எனக்கு அனுப்பினார்கள். அந்த படத்திலும் என்னால் நடிக்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

ஆனால் இந்த இரு படங்களுமே பெரிய வெற்றிப்படங்களாக அமைந்தது.

# தாக்கரே குடும்பத்துடன் கூட்டு; பாஜகவுக்கு அதிர்ச்சியளித்த ஷிண்டே

## மும்பையில் களைகட்டும் கூவத்தூர் பாணி





வழக்கமாக பதவி, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற பாரதிய ஜனதா கட்சிதான் பல தந்திரங்களை செய்யும். திடீரென்று கூட்டணியை கவிழ்க்கும் செயல்களில் ஈடுபடும். அப்படிப்பட்ட பாரதிய ஜனதா கட்சிக்கே கூட்டணி மாறி அதிர்ச்சி கொடுத்துள்ளது ஒரு கட்சி. அது எந்த கட்சி என இந்த செய்தி தொகுப்பில் காணலாம்.

மகராஸ்டிரத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் உள்ளது. முதல்வராக தேவேந்திர பட்னாவிஸ் உள்ளார். பாரதியஜனதா கட்சி இந்த மாநிலத்தில் ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனாவுடன் ‘மகாயுதி’ என்ற பெயரில் பெரிய கூட்டணியை அமைத்துள்ளது. இதனால், ஏக்நாத் ஷிண்டே மகராஸ்டிரத்தில் துணை முதல்வர் பதவியில் உள்ளார். இந்த நிலையில், மகாராஸ்டிரத்தில் மாநகராட்சி தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்தது. இந்த தேர்தலில் மகாயுதி கூட்டணி அபார வெற்றி பெற்றுள்ளது. இந்தியாவின் மிகப்பெரிய பணக்கார நகரமான மும்பையை மகாயுதி கூட்டணி கைப்பற்றியது. மும்பையில் 227 வார்டுகள் உள்ளன. பெரும்பான்மைக்கு 114 இடங்கள் போதுமானது. பாரதிய ஜனதா கட்சி 89 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. ஷிண்டேவின் சிவசேனா 29 வார்டுகளை கைப்பற்றியது. இதனால், மொத்தம் 118 இடங்களில் பாஜக கூட்டணி வெற்றி பெற்று மும்பை மாநகராட்சியை கைப்பற்றியது. உத்தவ் தாக்கரேவின் சிவசேனா மற்றும் ராஜ் தாக்கரேவின் மகாரஸ்டிர நவநிர்மாண் சேனா கூட்டணி மொத்தம் 78 வார்டுளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. இதனால், கடந்த 28 வருடங்களாக தாக்கரே குடும்பத்தின் சிவசேனா கையில் இருந்த மும்பை மாகராட்சி முதன் முறையாக பாஜக கூட்டணி பக்கம் வந்துள்ளது. மும்பை மேயர் பதவி என்பது மிகவும் கவுரவமானது. இதனால், மேயர் பதவியை கைப்பற்ற கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

மும்பையில் 29 வார்டுகளில் வெற்றிபெற்றுள்ள ஷிண்டேவின் சேனா தங்கள் கட்சிக்கு மேயர் பதவியை கேட்பதால் பாரதிய ஜனதா கூட்டணியில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால், பாரதிய ஜனதா கட்சி தங்கள் கவுன்சிலர்களை பேரம் பேசி வாங்கி விடுமென்ற பயமும் ஷிண்டேவுக்கு ஏற்பட்டது. தொடர்ந்து, தங்கள் கட்சியைச் சேர்ந்த அனைத்து கவுன்சிலர்களையும் பாந்திராவிலுள்ள தாஜ் என்ட் லேண்ட் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மொத்தமாக தங்க வைத்துள்ளார். மாற்றுகட்சியினர் தொடர்பு கொள்ள முடியாதபடி, ஷிண்டே கட்சி கவுன்சிலர்கள் அங்கு தங்க வைக்கப் பட்டுள்ளனர்ல. ஹோட்டலில் புதிய கவுன்சிலர்களுக்கு நமது கூவத்தூர் பாணியில் கவனிப்பு பலமாக இருக்கிறதாம். குதிரை பேரத்தை தடுக்கவே ஏக்நாத் ஷிண்டே கூவத்தூர் பாணியை பின்பற்றுவதாக சொல்கிறார்கள்.

மும்பை மேயர் பதவிக்கு மட்டுமல்லல... கே. டி. எம்.சி. என்று அழைக்கப்படும் புறநகர மாநகராட்சி மேயர் பதவியை கைப்பற்றவும் இரு கட்சிகளும் முட்டி மோதிக் கொண்டுள்ளன.

மும்பை புறநகர பகுதியில் கல்யாண் மற்றும் டோம்பிலி பகுதிகள் உள்ளன. நமது தாம்பரம் போல இந்த மாநகராட்சியும் மும்பையில் மிக முக்கியமானது. இதனை கல்யாண் டோம்பிவி மாநகராட்சி என்று சொல்வார்கள். சுருக்கமாக கே.டி.எம்.சி என்று அழைப்பார்கள். இங்கு நடந்த உள்ளாட்சி தேர்தலிலும் மகாயுதி கூட்டணி அபார வெற்றி பெற்றது. இங்குள்ள 122 வார்டுகளில் பாரதிய ஜனதா 50 வார்டுகளையும் அதன் கூட்டணி கட்சியான ஷிண்டேவின் சேனா 53 வார்டுகளையும் கைப்பற்றின. இந்த மாநகராட்சியில் உத்தவ் தாக்கரேவின் சிவசேனா 11 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. ராஜ் தாக்கரேவின் எம்என்எஸ் கட்சி 5 வார்டுகளிலும் பெற்றி பெற்றுள்ளன. இங்கு, பெரும்பான்மை பெற 62 இடங்கள் தேவை. கல்யாண்-டோம்பிவிலி மாநகராட்சி தேர்தலில் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இது சிவசேனாவின் கோட்டையாகும். இங்கு சிவசேனா தனிமெஜாரிட்டியை பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை.

மும்பை போலவே கல்யாண் டோம்பிவிலி மாநராட்சியிலும் பாரதிய ஜனதா கட்சிய மேயர் பதவியை ஷிண்டேவுக்கு விட்டு கொடுக்க விரும்பவில்லை. இதனால், ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா கவுன்சிலர்களை பேரம் பேசி வாங்கி பாரதிய ஜனதா கட்சி அதிகாரத்தை கைப்பற்ற துடிக்கிறது. அல்லது இரு கட்சிகளும் தலா இரண்டரை ஆண்டு காலம் மேயர் பதவியில் இருக்கலாம் என்று பாரதிய ஜனதா ஆலோசனை கூறுகிறது. ஆனால், இதனை ஏக்நாத் ஷிண்டே ஏற்கவில்லை. இதனால், பாரதிய ஜனதா கட்சியை கை கழுவ ஷிண்டே முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. பாரதிய ஜனதாவுக்கு பதில் தாக்கரே குடும்ப கட்சிகளுடன் கூட்டணி அமைத்து கல்யாண் - டோம்பிவிலி மேயர் பதவியை கைப்பற்ற முடிவு செய்துள்ளார். இது தொடர்பாக கொங்கண் பவனில் நடந்த ஏக்நாத் ஷிண்டேவின்வின் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தாக்கரே குடும்ப கட்சி கூட்டணியுடன் கல்யாண் - டோம்பிவிலி மாநகராட்சியில் மேயர் பதவியை பெற திட்டமிட்டுள்ளதாக ஏக்நாத் ஷிண்டேவின் மகனும் எம்.பி.யுமான ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார். ஷிண்டேவின் இந்த திடீர் முடிவு பாரதிய ஜனதா கட்சிக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

மகாராஸ்டிரத்தில் கூட்டணியாக ஆட்சியிலுள்ள நிலையில், ஒரு மாகராட்சி மேயர் பதவிக்காக இரு கட்சிகளும் முட்டி மோதிக் கொள்வதும் ஆச்சரியத்தை அளிக்கிறது. அரசியலில் எப்போதும் எது வேண்டுமென்றாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்று மகாராஸ்டிர அரசியலை வைத்து உறுதியாக சொல்லலாம். கடந்த டிசம்பர் மாதத்தில் மகராஸ்டிரத்தில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து தேர்தல் நடைபெற்றது. மும்பையின் மற்றொரு புறநகர் பகுதி அம்பர்நாத் நகராட்சியில் பாரதிய ஜனதா கட்சி காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தது. அகோலா நகராட்சியில் பாரதிய ஜனதா கட்சி அசாசுதீன் உவேசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியின் கூட்டணி வைத்து தேர்தலை சந்தித்தது. அதாவது, மாநில தலைமையின் அனுமதி இல்லாமல் உள்ளுக்குள் அவர்களே கூட்டணி அமைத்துக் கொண்டனர். பாஜக லோக்கல் தலைவர்களின் செயல்பாட்டுக்கு மகாராஸ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடுமையாக எச்சரித்தார். அம்பர்நாத் பகுதி காங்கிரஸ் கட்சித் தலைவர் பிரதீபா பாட்டிலின் பதவியை காங்கிரஸ் கட்சி பறித்தது. அம்பர்நாத் மாநகராட்சியில் 12 காங்கிரஸ் கவுன்சிலர்களையும் சஸ்பெண்ட் செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

THE KOVAI HERALD
JANUARY 25, 2026 - SUNDAY

# தமிழகத்தில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் போல வெற்றி பெற்றவர் நல்லா பழனிச்சாமி

## குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம்




நவீன நரம்பியல் அறிவியல் மையம், புறநோயாளிகள் பிரிவு மற்றும் முதுநிலை மருத்துவப் பிரிவை இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். உடன் டாக்டர் நல்லா ஜி பழனிச்சாமி, தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், துணைத் தலைவர் தவமணி பழனிசாமி, டாக்டர் அருண் பழனிச்சாமி, செயல் இயக்குநர், டாக்டர் பூரணி பாவை பழனிச்சாமி, இயக்குனர், ரமணி சங்கர், தலைமை கட்டிடக் கலைஞர், சங்கர் அண்ட் அசோசியேட்ஸ், டாக்டர் எம். மாணிக்கம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், சக்தி குழுமம், மேஜர் ஜெனரல் டாக்டர் ஆர். ரவி குமார் டீன், கே.எம்.சி.ஹெச் . இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹெல்த் சயின்சஸ் அண்ட் ரிசர்ச்.

தி கோவை ஹெரால்டு

கோவை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் நவீன நரம்பியல் அறிவியல் மையம், புறநோயாளிகள் பிரிவு மற்றும் முதுநிலை மருத்துவப் பிரிவு தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பேசுகையில், "மருத்துவ உலகில் புதிய எழுச்சியாக இம்மருத்துவமனையில் நரம்பியல் சிகிச்சைக்கான புதிய கட்டிடம் திறக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். தொடர்ந்து பேசியவர், மனிதன் வெற்றி பெற கடின உழைப்பும் விடாமுயற்சியும் அவசியம் எனக் கூறியவர், தமிழகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அந்த வகையில் வெற்றிபெற்றவர் எனவும், மற்றொருவராக நல்லா பழனிச்சாமி திகழ்வதாகவும் பெருமிதம் தெரிவித்தார்.

நல்லா பழனிச்சாமி சாதாரண கிராமத்தில் பிறந்து அமெரிக்காவில் மருத்துவ படிப்பு முடித்த பின்பு, 200 படுக்கை வசதியோடு துவங்கிய மருத்துவமனை இன்றைக்கு 2000க்கும் மேற்பட்ட படுக்கைகளை கொண்டு சிறப்பாக இயங்கி வருவதாகவும், அமெரிக்கா உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் மருத்துவ உலகில் அறிமுகம் செய்யப்படும் நவீன தொழில்நுட்பங்கள் உடனடியாக கோவைக்கு இந்த மருத்துவமனை மூலம் கொண்டுவரப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், ஒரு பைசா லஞ்சம் கூட தராமல் மருத்துவக் கல்லூரிகளைப் பெறும் நிலை இன்று உருவாகியுள்ளது என்பது ஆச்சரியமான மற்றும் வரவேற்கத்தக்க மாற்றம். பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் 'எல்லோருக்கும் அனைத்தும்' என்ற நோக்கில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார். ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்காமல் வல்லரசாக இந்தியாவை உருவாக்க முடியாது எனக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

கேஎம்சிஹெச் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி தனது தலைமையுரையில், "எப்போதும் நவீன மருத்துவ தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதில் கேஎம்சிஹெச் முன்னணியில் இருக்கிறது" என்றார்.

செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி பேசுகையில் "புதிய முதுகலை மருத்துவப் படிப்புகள் மூலம், அடுத்த தலைமுறை மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதை நாங்கள் உறுதி செய்கிறோம்." என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி. சதாசிவம், சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், கே.எம்.சி.ஹெச். துணைத் தலைவர் தவமணி பழனிசாமி, செயல் இயக்குநர் அருண் பழனிசாமி, முன்னாள் ஆளுநர் வி. சண்முகநாதன், முன்னாள் அமைச்சர்கள் எஸ். பி.வேலுமணி, கே.சி.கருப்பணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## குடியரசு தின அணி வகுப்பு சாதனை படைத்த காஷ்மீர் பெண் அதிகாரி



புதுடெல்லியில் நடைபெறவுள்ள நாட்டின் 77-வது குடியரசு தின அணிவகுப்பில், ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 26 வயதான சிம்ரன் பாலா ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைக்கவுள்ளார். மத்திய போலீஸ்படையின் உதவித் தளபதியான இவர், வரும் ஜனவரி 26 அன்று கடமைப் பாதையில் நடைபெறும் அணிவகுப்பில் 140-க்கும் மேற்பட்ட ஆண் வீரர்களைக் கொண்ட படைப் பிரிவைத் தலைமை தாங்கி வழிநடத்தவுள்ளார்.

சிஆர்பிஎஃப் வரலாற்றில் ஒரு பெண் அதிகாரி, முழுமையாக ஆண்கள் மட்டுமே கொண்ட ஒரு பெரிய படைப்பிரிவை வழிநடத்துவது இதுவே முதல் முறையாகும்.

ஜம்முவின் காந்திநகரில் உள்ள அரசு மகளிர் கல்லூரியில் அரசியல் அறிவியல் பட்டம் பெற்ற இவர், விடாமுயற்சியுடன் மத்திய பொதுப்பணி ஆணையத்தின் தேர்வில் வெற்றி பெற்று இத்துறையில் கால் பதித்தார்.

இவருடைய இந்த வளர்ச்சி ஜம்மு காஷ்மீர் இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்குப் பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது

சிம்ரன் பாலா ஜம்மு காஷ்மீரின் எல்லையோர மாவட்டமான ரஜோரியைச் சேர்ந்தவர். அந்த மாவட்டத்திலிருந்து நாட்டின் மிகப்பெரிய துணைராணுவப்படையான சிஆர்பிஎஃப்-இல் அதிகாரி நிலைக்குத் தேர்வான முதல் பெண்மணி என்ற பெருமை இவருக்கு உண்டு. பயிற்சிக் காலத்திலேயே தனது திறமையை நிரூபித்த சிம்ரன் பாலா, குருகிராமில் உள்ள சிஆர்பிஎஃப் அகாடமியில் சிறந்த அதிகாரி மற்றும் சிறந்த பேச்சாளருக்கான விருதுகளை வென்றவர்.

2025-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த இவருக்கு, சத்தீஸ்கர் மாநிலத்தின் நக்சல் எதிர்ப்புப் பிரிவான 'பஸ்தாரியா' பட்டாலியனில் முதல் பணி வழங்கப்பட்டது. அடர்ந்த காடுகளிலும் சவாலான சூழலிலும் பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர், தற்போது தலைநகரில் நடைபெறும் மிக முக்கியமான தேசிய விழாவில் தனது படையை வழிநடத்தும் கௌரவத்தைப் பெற்றுள்ளார்.

## அமெரிக்கா ஈரானை தாக்கினால், பாகிஸ்தான் நிலை என்னவாகும்?

அமெரிக்கா ஈரானை தாக்கினால், நமது அண்டை நாடான பாகிஸ்தானும் பெருமளவில் பாதிக்கப்படலாம். ஈரானுடன் பாகிஸ்தான் 900 கி.மீ தொலைவு எல்லையை பகிர்ந்து கொள்கிறது. எனவே, ஈரானில் அமைதி நிலவுவது அந்த நாட்டுக்கு முக்கியமானதாகும். ஏற்கனவே, இந்தியா நிரந்தர எதிரியாக அந்த நாட்டுக்கு உள்ளது. அதோடு, ஆப்கானிஸ்தான் நாட்டை தாக்க அமெரிக்க படைகளுக்கு தங்கள் வான்பரப்பை அனுமதித்ததால், அந்த நாடும் பாகிஸதானுக்கு புதிய எதிரியாக மாறியுள்ளது. தலிபான்கள் பாகிஸ்தானுக்கு வில்லன்களாக மாறி நிற்கின்றனர்.

அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், நட்பு நாடான தங்கள் நாட்டு விமானத் தளங்கள், வான்பரப்பை பயன்படுத்த அனுமதி கேட்கலாம் என்று பாகிஸ்தான் கருதுகிறது . அப்படி, அனுமதி கொடுத்தால் ஈரானும் பாகிஸ்தானுக்கு எதிரி நாடாக மாறி விடும். அனுமதி கொடுக்கவில்லையென்றால், அமெரிக்காவுக்கு நெருக்கடி கொடுக்கும் . அதாவது, ஒரு படத்தில் வடிவேலு விடத்தில் வேலை பார்க்கும் இரு பாதுகாலர்களிடத்தில் சண்டை வந்து விடும். அப்போது, வடிவேலு காலில் போட்டுள்ள செருப்பை வாங்கி உன்னை அடிப்பேன் என்று ஒருவர் மற்றொருவரை பார்த்து சொல்லுவார். என்னை அடிக்க , அவன் செருப்பை கொடுத்துடுவானா? என்று மற்றொருவர் கேட்பார். முடிவில் இருவரும் சேர்ந்து வடிவேலுவை அடிப்பார்கள்.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழலில்தான் பாகிஸ்தான் இரு தலை கொள்ளியாக தவிக்கிறது. ஏற்கனவே, ஒரு பக்கத்தில் இந்தியா மறுபக்கத்தில் தலிபான்கள் இந்த சூழலில் ஈரானும் எதிரியானால் பாகிஸ்தான் நிலைமை என்னவாகும் என்று யோசித்தே பார்க்க முடியாது.

பலூசிஸ்தானில் பலூச் விடுதலை அமைப்பு ஏற்கனவே பாகிஸ்தானுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. பலூசிஸ்தானின் பெரும்பகுதி தென்மேற்கு பாகிஸ்தானில் அமைந்துள்ளது. பாகிஸ்தானின் இந்த மாகாணம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 44% கொண்டுள்ளது. ஆனால், 6 சதவிகித பலூச் மக்கள்தான் வசிக்கின்றனர். இங்கு, மக்கள் தொகை மிக குறைவு கனிமவளங்கள் அதிகம். குறிப்பாக , பலூசிஸ்தான் மாகாணம் ஈரான் நாட்டுடன் எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளது . தங்கள் மாகாணத்தில் வளங்களை சீன அரசுக்கு பாகிஸ்தான் தரை வார்ப்பதாக பலூச் விடுதலைப்படையினர் கருதுகின்றனர். இதனால், பாகிஸ்தான் ராணுவத்தினரை எதிர்த்து கடுமையாக போராடி வருகின்றனர். பெண்களை தற்கொலைப்படையினராக பயன்படுத்தி வருகின்றனர். சீனர்களை குறி வைத்து தாக்குவார்கள்.

சீனநாட்டின் திட்டங்களையும் குறி வைத்து தாக்குதல் நடத்துவார்கள். கடந்த 2025ம் ஆண்டு மார்ச் மாதத்தில் குவெட்டாவில் இருந்து ராவல் பிண்டி நோக்கி சென்ற ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை பலூச் தீவிரவாதிகள் கடத்தி சென்று ராணுவ வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானோரை கொன்றுக் குவித்தனர்.

பலூச் விடுதலைப் படையினர் பாகிஸ்தான் ராணுவத்துக்கு சிம்ம சொப்பனமாகவே உள்ளனர். இப்படி, உள்நாட்டில் மிக வலிமையாகவுள்ள எதிரியை சமாளிக்க வேண்டிய நிலையில் பாகிஸ்தான் இருக்கிறது. ஒரு படத்தில் இதனால், ஈரான் எல்லையை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் பாகிஸ்தான் இருக்கிறது. ஈரான் பலூச் அமைப்புக்கு ஆதரவு கொடுக்க ஆரம்பித்தால் பாகிஸ்தான் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும்.

ஏற்கனவே, ஈரானை தாக்க பாகிஸ்தான் தங்கள் வான்பரப்பை அனுமதித்துள்ளதாக சமூகவலைத்தளங்களில் வதந்தி பரவியது. இதனால், பதறிப்போன பாகிஸ்தான் உடனடியாக, இந்த தகவலுக்கு மறுப்பு தெரிவித்தது. அதோடு, ஐ.நா. சபை நோக்கியும் ஓடி கைகூப்பியது. ஐ.நா. பாதுகாப்பு சபையில், 'ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக் கூடாது. அந்த நாட்டின் இறையான்மையை பாதுகாப்பது பிற உலகநாடுகளின் கடமை' என்று கூறி கதறியது. ஏனென்றால், பல பில்லியன் டாலர்கள் கடனிலுள்ள பாகிஸ்தானால் ஈரான் எல்லையில் அமைதியின்மை ஏற்பட்டால் சமாளிக்கவே முடியாது. 3 பக்கமும் எதிரி என்றால், வறுமையில் கிடக்கும் ஒரு நாட்டால் எப்படி பாதுகாப்பாக வாழ முடியுமென்பதே பாகிஸ்தானின் மிகப் பெரிய கவலை.

## பெள்ளாதி சங்கமேஸ்வரர் கோயிலில் குல சங்கமம்



தி கோவை ஹெரால்டு

மேட்டுப்பாளையம் அருகே பெள்ளாதியில் உள்ள ஸ்ரீ வேதநாயகி சமேத ஸ்ரீ சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் வெள்ளிக்கிழமை நூறாண்டுகளுக்கு மேல் பிரிந்திருந்த ஒக்கலிகர் சமூகத்தின் பாணியர், குன்னமாரன் குலத்தவர்கள் ஒன்று சேர சிவப்பாதோதகத் தீர்த்தப் பரிமாற்ற சமரச விழாவை இணைந்து நடத்தினர்.

கோயில் குருக்கள் முரளி அபிஷேகப் பூஜையைச் செய்தார். மிஜோரம் மத்தியப் பல்கலைக்கழக சமூகப்பணியியல் பேராசிரியர் முனைவர் கனகராஜ் ஈஸ்வரன் (பாணியர் குலம்) இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். குன்னமாரன் குலத்தைச் சேர்ந்த வடபொன்முடி ஊர்தலைவர் துரைசாமி கவுடர், வி.என். ராமசாமி, முத்துசாமி, மணி, பழனிச்சாமி, ஜடையம்பாளையம் நஞ்சுண்டன் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் தீர்த்தப் பரிமாற்றத்தில் கலந்து கொண்டனர்.

பாணியர் குலத்தைச் சேர்ந்த மத்தம்பாளையம் பெரிய மசனியம்மன் கோயில் நிர்வாகக்குழுவின் செயலாளர் எம்.ஜி. பழனிச்சாமி, இன்ஜினியர் பரமேஸ்வரன், சென்னிவீரம்பாளையம் குருசாமி, தேரம்பாளையம் பழனிச்சாமி, மோத்தேபாளையம் ஈ.பரமேஸ்வரன், மேடூர் சுரேஷ், முட்டுக்கல்லூர் ஜி.கோவிந்தராஜ், குத்தாரிபாளையம் செல்வி தேவராஜ் உட்பட பலர் பங்கேற்றனர். ஆலூர் தேசிகவுடர் குலத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகத் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், லிங்காபுரம் பழனிச்சாமி, பனவேர் தொட்டகவுடர் குல மூத்தவர் ஜி.சுப்பிரமணியம் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர்.

## கரூர் அரசு கலைக்கல்லூரி ஊட்டச்சத்து ஆய்வகம் திறப்பு




கரூர் அரசு கலைக்கல்லூரி ஊட்டச்சத்து மற்றும் உணவு முறைகள் துறைக்கு, பவர் கிரிட் நிறுவனம் சமூகப் பொறுப்பு நிதியின் மூலம் வழங்கிய ஆய்வக உபகரணங்களை, தென் மண்டல தலைமை பொது மேலாளர் கணேசன், மனித வள மேலாண்மை பொது மேலாளர் தன்வீர் பண்டயாப்புரத் மற்றும் துணைப் பொது மேலாளர் அருள்குமரன் ஆகியோர் கல்லூரி முதல்வர் முனைவர் சா. சுதாவிடம் அளித்தனர். இந்நிகழ்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் சுப்ரமணி மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் செழியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

FOR NEWS Publication 9244317182 / 04223147962

## இந்திய ரயில்வேயில் மனித வடிவிலான ரோபோட் சேவை துவக்கம்

இந்திய ரயில்வே நிர்வாகம் பயணிகளின் பாதுகாப்பையும் பயணத் தரத்தையும் உயர்த்த பல நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் நிலையில், முதல்முறையாக மனித வடிவிலான ரோபோர்ட் அறிமுகப் படுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் "ஏ.எஸ்.சி. அர்ஜுன்" எனப் பெயரிடப்பட்ட இந்த மனித வடிவிலான ரோபோட், ரயில்வே பாதுகாப்புப் படையின் கீழ் செயல்படுகிறது. பயணிகள் பாதுகாப்பு, உதவி மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளில் இது ஈடுபட உள்ளது.



ரயில்வே அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் துறையின் வழிகாட்டுதலின் கீழ், ரயில்வே பாதுகாப்புப் படை குழு ஒரு ஆண்டுக்கும் மேலாக ஆய்வு செய்து, தொழில்நுட்ப ஆதரவுடன் இந்த ரோபோட்டை உருவாக்கியுள்ளது.

இந்த ரோபோட் நுண்ணறிவு தொழில்முறை திறன், முகம் அடையாளம் காணும் அமைப்பு, இணைய இணைப்பு மற்றும் நிகழ்நேர கண்காணிப்பு வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களில் ஊடுருவல் அல்லது சந்தேகச் செயல்பாடுகளைத் துல்லியமாக கண்டறிந்து, பாதுகாப்புப் படையினருக்கு உடனடி எச்சரிக்கை வழங்கும் திறன் இதனுக்கு உண்டு.

ஆங்கிலம், இந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் பயணிகளுக்கு அவ்வப்போது அறிவிப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், கூட்ட நெரிசலை நுண்ணறிவின் மூலம் கணக்கிட்டு, பயணிகளுக்கு சரியான வழிகாட்டுதல்களையும் அதிகாரிகளுக்கு எச்சரிக்கைகளையும் அளிக்கிறது.

தீ மற்றும் புகை போன்ற அபாய சூழல்களையும் ஆரம்பத்திலேயே உணர்ந்து, பயணிகள் மற்றும் பாதுகாப்புத் துறைக்கு உடனடி எச்சரிக்கை தெரிவிக்கும் திறன் கொண்ட இந்த ரோபோட், ரயில்வே பாதுகாப்பு நடவடிக்கைகளில் புதியபடி தொழில்நுட்ப முன்னேற்றத்தை பதிவு செய்கிறது.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)